# ஞானதீபம்



அகல் 1

சுடர் 3

அகிலபிராமண குரு சமூஹ
சேவா சங்க மும்மாச வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை 1965

பத்திராசிரியர்

**பிரமஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா அவர்கள்**

# ஒளிரும் கதிர்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | காயத்திரீ | — | 87 |
| 2. | விசேஷ மகாநாட்டு வரலாறு | — | 93 |
| 3. | நவக்கிரக சாந்தி | — | 97 |
| 4, | உபநிடத உண்மை விளக்கம் | — | 101 |
| 5. | ஸ்ரீலங்கா பிரம்ம வித்யார்த்தி சபா | — | 105 |
| 6. | செயற்படுத்தத்தகும் திட்டங்கள் | — | 106 |
| 7. | சங்கச் செய்திகள் | — | 108 |
| 8. | அங்கத்தவர்களுக்கும் | — | 113 |
| 9. | தினங்கள் பற்றிய குறிப்பு | — | 114 |
| 10. | அறிவுச் சுடர்மணிகள் | — | 117 |
| 11. | ஐய வினு — விடை | — | 118 |
| 12. | மறைப்பொருளை............உடையவர் | — | 122 |
| 13. | நவராத்திரி தத்துவம் | — | 124 |
| 14. | உபாகர்மம் | — | 132 |
| 15, | ஸ்நபனுவலி | — அனுபந்தம் | 1 |
| 16. | சிவபூஜை | — ,, | 2 |
| 17. | ஆமரூப ஆகம சிராத்தம் | — ,, | 3 |



| | | |
|---|---|---|
| பத்திரிகைக் கட்டணம் வருடத்துக்கு — | ரூ. | 3-00 |
| அங்கத்தவர்களுக்கு | ரூ. | 2-00 |
| தனிப்பிரதி | சதம். | 75 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தனக் காப்பு

* கோவில் தேவைகளுக்கும்
* விவாகம் முதலிய விசேட வைபவங்களுக்கும்

உபயோகமாகும் சந்தன வில்லைகள்
எங்கே கிடைக்கும் என்ற கவலைவேண்டாம்
சுத்தமான சந்தனக்கட்டையை
இயந்திரமூலம் பசுமையாக அரைத்து
விற்பனை செய்கிறோம்.

## இறைவன் திருமேனியில்
## சந்தனக் காப்பிட்டு
## அலங்கரிக்க மிகவும் உகந்தது

எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.

— 1 —

கிடைக்குமிடம்:

## சுந்தரம் பிறதர்ஸ்

கோவில் அபிஷேகப் பொருட்கள்,
மருந்துச்சரக்கு விற்பனையாளர்.

73 மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J P. 1—65

கோவில் வைபவங்களா!        திருமண மங்கலகாரியங்களா!!
இன்றே வாங்கி ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்.

★ ஸ்ரீ லங்கா இன்டஸ்ரீசாரின் தயாரிப்பான ★

"அசோகா"வின்  கிறீன் தர்பார்,  நடராஜா றேஸ்
நாகராணி

- மணத்தில்: வாசனை ஊதுவர்த்திகளே,
- குணத்தில்: தரஞ் சிறந்தவை,

மேலும், அழகிற்கு அழகூட்டும்
அசோகா வாசனை சாந்துப்பொட்டும் எங்கள் தாயாரிப்பே
விபரங்களுக்கு:-

## ஸ்ரீ லங்கா இன்டஸ்ரீஸ்

வாசனை ஊதுவர்த்தி தயாரிப்பாளர்,
நீர்கொழும்பு

சோல் ஏஜண்டுகள்:-

வட பிரதேசம்:-
K. K. சர்மா
343 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

கிழக்குப்பிரதேசம்:-
T. கைலாசநாதன்
பிள்ளையார்கோவிலடி, கல்லடி
மட்டக்களப்பு.

J. P. 11-65

---

# க. வை. ஆ. சர்மா எழுதிய நூல்கள்

(நாதன் வெளியீடுகள்)

| | | ரூ. சதம் |
|---|---|---|
| 1. | அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம் லலிதா சகஸ்ர நாமாவளியுடன் | 2 - 00 |
| 2. | ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கத் தோத்திரம் தமிழ்மொழி ஆக்கமும் உரை விளக்கமும் | 1 - 00 |
| | (அன்புவெளியீடுகள்) | |
| 3. | சைவசமய வினாவிடை (முதலாம் புத்தகம்) | 75 |
| 4. | ,, ,, (இரண்டாம் புத்தகம்) | 1 - 00 |

இவை பிரபல புத்தகசாலைகள் எங்கும் கிடைக்கும்
தொகையாகக் கிடைக்குமிடம்

1. க. வை. ஆ சர்மா,
உடையார்வளவு
19/2, ஐயனார்கோவில் தெரு,
வண்ணை-யாழ்ப்பாணம்.

2. ஆ. வைத்தியநாத சர்மா,
284 1/4, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு.

J. H. 6-65.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் - உலோகத் தொழிற்சாலை.

## YARL METAL INDUSTRIES JAFFNA

**உறுதியான அலுமினியப் பாத்திரங்களின் உற்பத்தியாளர்**

*உலோக வகைப் பொருள்களுக்கு மின்சக்தியினால்*

**தங்கம் ★ வெள்ளி ● நிக்கல் ★ குரோமியம்**

பூச்சுக் கொடுக்கும் உத்தம உற்பத்தி நிலையம்

*—அன்பளிப்புக்கு ஏற்ற—*

எவர்சில்வர் பாத்திரங்கள், வேறும்

அலங்காரப் பொருள்களுக்கும் ஏற்ற இடம்

*உள்நாட்டுக் கைத்தொழில் அலுமினியப்*

*பாத்திரங்களையே ஆதரியுங்கள்.*

தொலைபேசி: 7049 தந்தி: YARL METAL

**250-252.** காங்கேசன்துறை வீதி, **யாழ்ப்பாணம்.**

J. P. 10-65

---

# சிறந்த வேலை! குறைந்த செலவு!!

# குறித்த நேரம்!!!

# ஸ்ரீ சண்முகநாத அச்சகம்

**336, 340.** காங்கேசன்துறைவீதி, **யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 285 தபால்பெட்டி: 12

J. P. 7-65


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்திரீக அறிவித்தல்

**தேவதை, பிணி, மருந்தீடு போன்ற**
**வியாதிகளால் வேதனைப்படுகிறீர்களா....?**
**அப்படியானால் நேரில் சந்திக்கவும்.**

மாந்திரீகபூஷணம்:

**க. சாம்பசிவக் குருக்கள்**

நாயன்மார்கட்டு, செம்மணி வீதி, **யாழ்ப்பாணம்.**

J. P. 14-65

# ஸ்ரீ ஹரன் அன் கோ

**91/4. ஆஸ்பத்திரி வீதி,** [தொலைபேசி எண்: 405] யாழ்ப்பாணம்.

★ சகல உணவுப்பொருள் வகைகளும், ○ ★ கால்நடைத் தீன் வகைகளும்.


விலைமலிவாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

J. P. 2-65

# பிலிகிரி நகை மாளிகையும்

## தொழிற்சாலையும்

○ சிறந்த வேலைப்பாடும்,
○ உத்தரவாதமும் உள்ள



**★ வைர தங்க ★**
**நகைகளை**
விரும்பிய டிசையின்களில்
பெற்றுக் கொள்ளலாம்.

**ஓடர் நகைகள் குறித்த தவணையில்செய்துகொடுப்பவர்கள்**

**வி. சரவணமுத்துப் பத்தர் அன் சன்ஸ்**

513. கே. கே. எஸ். வீதி : யாழ்ப்பாணம்.

J. P. 3-65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானதீபம்
# ஜ்ஞாநதீபம்

'Gnanadeepam' IS A QUARTERLY MAGAZINE ISSUED BY 'Akhila Brahmana Guru Samuha Seva Sangham' GENERALLY FOR THE PROGRESS OF HINDU RELIGION AND CULTURE AND ESPECIALLY FOR THE UPLIFT OF THE BRAHMIN COMMUNITY.

| அகல் 1 | விசுவாவசு ௵ ஆடி ௴ ௧௨ (16–7–65) | சுடர் 3 |
| --- | --- | --- |

யஸ்மாஜ்ஜாதம் ஜகத்ஸர்வம் யஸ்மின்னேவ ப்ரலீயதே।
யேனேதம் தார்யதே சைவ தஸ்மை ஜ்ஞானாத்மனே நம:॥

உலகம் யாவும் ஒருங்கினி தாக்கியும்
அலகில் ஆக்கம் அமைவுறத் தேக்கியும்
விலகி ஒன்றிட வேண்டி ஒடுக்கியும்
நிலவு ஞானமா நீர்க்குணம் போற்றுவாம்.

## காயத்திரீ

பரம்பொருளாகிய இறைவன் அகில பிரபஞ்சத்தையும் இயற்றுது இயற்றி அருள் புரிகின்றான். அதற்குக் காரணம் கூறுவதற்கில்லை. அது அவன் திருவிளையாட்டு. உண்டென்பார்க்கு ஒளிவிளக்காய் நின்றும், இல்லையென்பார்க்கு இலை மறைகாய்போலிருந்தும் அருள்சுரத்தல் இறைவன் திருவருட் செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறைவன்" எனக்குறிப்பிடும் இடங்களில் எல்லாம், சிவமும் சிவசக்தியும் வேறுபிரித்தறியவொண்ணாது, ஒன்று பட்ட பரப்பிரம்ம சுவரூபம் என்பதே கருத்தாகும். ஆன்மாக்கள் பொருட்டுத் தடைப்படாப் பெருங்கருணையின் இருப்பிடமாக உள்ளதே சிவம். அக்கருணையின் ஊற்றுவதே சிவசக்தி. எனவே, சிவசக்தி வழிபாடு என்பது சிவ வழிபாட்டுக்கு வேறானதாகவோ, மாறானதாகவோ ஒருபோதும் அமையாது. காயத்திரீ வழிபாடு என்பது உற்று நோக்குமிடத்து இலகுவான சிவ வழிபாடேயாகும்.

தாயின் மூலமாகத் தந்தையின் அன்பைப்பெறுதல் உலக நடைமுறையில் இருப்பதை இன்றும் காணலாம். ஆன்மலாபப் பயன்பெறுவதற்கும் அதுவே வழியாகும், அதனாலேயே காயத்திரீ வழிபாடு ஒவ்வொரு பிராமணச் சிறுவனுக்கும் முதன் முதலில் தொடக்கி வைக்கப்படுகிறது. அப்படியானால், காயத்திரீ வழிபாடு எல்லா மக்களுக்கும் பொதுவாக ஏன் அமையவில்லை? என்ற வினா இங்கு எழலாம் அதற்குரிய காரணத்தைத் தெளிவு படுத்தியபின், காயத்திரீ வழிபாட்டுமுறையைச் சிறிது விளக்குவாம்.

காயத்திரீ வேதமாதா எனப்படுவார். வேதத்துக்கு மறை என்றும் ஒரு பெயர் உள்ளது. மறைவான நுண்பொருளைத் தன்னுள்ளே அடக்கியது வேதம். விலைமதிக்கவொண்ணாத ஒரு மேதகு மணியைப் பொற்கிரீடத்திலே, இன்றேல் மார்புப்பதக்கத்திலே பதிக்கலாம். அதனால் குறித்த பொற்பணிகள் பெருமையும் பயனும் அடையும். அதுபோலவே வேதமும் அந்தணருக்குச் சிறப்பாக அமைந்துள்ளது. ஏனையோர் வேதப்பொருளை அறிந்து பயனடையலாமேயன்றி வேதத்தை நேரே ஓதலாகாது என்றும் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. காயத்திரீ மந்திர உபதேசம் பெற்றாலன்றிப்பிராமணப் பிள்ளைகளுக்கு வேதம் ஓதும் அதிகாரம் அமையாது.

"அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளும் அடிபரவ" என்பது —திருஞானசம்பந்தர் தேவாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலையும் மாலையும் நான்மறையோதா
அந்தண ரென்போர் அனைவரும் பதரே" என்பது நீதிவாக்கியம்.
— வெற்றிவேற்கை

எனவே, பிரம்மோபதேசம்பெறும் உரிமையுடைய அந்தணர் யாவரும் காயத்திரீ மந்திரத்தைப்பற்றி விரிவாக அறிந்திருக்கவேண்டியது மிக அவசியமாகும்.

தளஜிஹெலீ° ஹுஸஞாஸ்ரா° ஞுதூரா°தா° வெஷசாதாடி|
உகிதீநூயாதிகா° ஸாஊா° ஜாயதீ° லக்ஷுவிஷிஷாடி||



காயத்திரீதேவியின் தியானரூபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலே யும் செய்கின்ற மும்மூர்த்திகளின் சுவரூபமாக உள்ள வரும், தூய்மையுடையவரும், மெய்யன்பர்களுக்குச் சித்தியை அருளுபவரும், பிரசன்னமான முகமுடையவரும், ஆதிமூர்த்தி தியாக உள்ளவரும். வேதமாதாவாக உள்ளவரும் ஆகிய அந்தக் காயத்திரீதேவியை வணங்குகிறேன்.

காயத்திரீ மந்திரத்தை ஜபம் செய்யத்தொடங்குமுன்னர் அம்பிகையின் திருவுருவை மனத்தில் இருத்திக் கொள்ளுதல் முறையாகும். அதுவே தியானம் செய்தல்.

## காயத்திரீ தியானம்

𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌵𑌿𑌦𑍍𑌰𑍁𑌮 𑌹𑍇𑌮𑌨𑍀𑌲 𑌧𑌵𑌲
𑌚𑍍𑌛𑌾𑌯𑍈𑌰𑍍 𑌮𑍁𑌖𑍈𑌸𑍍 𑌤𑍍𑌰𑍀𑌕𑍍𑌷𑌣𑍈𑌃।
𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌇𑌨𑍍𑌦𑍁𑌨𑌿𑌬𑌦𑍍𑌧𑌰𑌤𑍍𑌨 𑌮𑍁𑌕𑍁𑌟𑌾𑌂
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥 𑌵𑌰𑍍𑌣𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾𑌮𑍍॥
𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌂 𑌵𑌰𑌦𑌾𑌭𑌯𑌾 𑌙𑍍𑌕𑍁𑌶𑌕𑌶𑌾𑌃
𑌶𑍁𑌭𑍍𑌰𑌂 𑌕𑌪𑌾𑌲𑌂 𑌗𑌦𑌾𑌂।
𑌶𑌂𑌖𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌅𑌥𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦 𑌯𑍁𑌗𑌲𑌂
𑌹𑌸𑍍𑌤𑍈𑌰𑍍𑌵𑌹𑌨𑍍𑌤𑍀𑌂 𑌭𑌜𑍇॥

முத்து, பவளம், பொன், நீலமணி, பளிங்கு என்பவற்றின் சாயைகளால் தனித்தனியாக ஒளிரும் ஐந்து திருமுகங்களே உடையவரும், முகந்தோறும் மூன்று கண்களை உடையவரும் சந்திரகலையைத் தாங்கிய இரத்தின கிரீடத்தைத் தரித்துள்ள வரும், தத்துவப்பொருளான எழுத்துக்களின் சுவரூபமாக உள்ளவரும், தமது பத்துத் திருக்கரங்களிலும் முறையே வரதம், அபயம், தோட்டி, சவுக்கு, வெள்ளிய கபாலம், கதா யுதம், சங்கு, சக்கிரம், இரு தாமரைப் பூக்கள் என்பவற் றைத் தாங்கியவரும் ஆகிய காயத்திரீ தேவியைத் தியானிக் கிறேன் என்பது தியான சுலோகத்தின் பொருளாகும்.

சிலபிரதிகளில் பாடபேதமாக

'𑌶𑍁𑌭𑍍𑌰𑌂 𑌕𑌪𑌾𑌲𑌂 𑌗𑌦𑌾𑌂' - என்ற இடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸஹஸ்ரம் கவாயும் மஹா. என்றும்;

'அரவிந்த யுக்மம்' என்பதற்குப் பிரதியாக

அரவிந்த ஏகம் என்றும் இருக்கிறது. அதனால், சூலம் என்ற ஒரு ஆயுதம் கூடுதலாகவும், இரு தாமரைப். பூக்களுக்குப்பதிலாக ஒரு தாமரைப்பூவும் அமைந்து இருக்கிறது. அன்பர்கள் குருபதேசப்படி விரும்பியதை ஏற்றுக் கொள்க.

இருபத்துநாலு அட்சரங்கொண்டது காயத்திரீ மந்திரம் இந்த மந்திரத்தை முறைப்படி உபதேசம் செய்யப்பெறாதவன் ஒருபோதும் பிராமணன் என மதிக்கப்படமாட்டான். எந்தக் கர்மாவும் செய்வதற்கு அவனுக்கு அதிகாரமில்லை. இந்த உபதேசக் கிரியைக்கு பிரம்மோபதேசமென்று பெயர் பிரம்மோபதேசம் பெற்றவனே இருபிறப்பாளன் ஆவான் மஹாசங்கல்பத்திலேகூட

'ஜாதோஹம் த்ருதீய ஜன்மவிசேஷம் ஹ்ராவர்த்தக' என்று சொல்லப்படுகிறது. அதாவது இப்பொழுது பெற்றுள்ள இந்த மாநுடப்பிறவியில் இருபிறப்பாளர் என்னும் பெருமையைப் பெற்றுள்ளயான், என்பது கருத்தாகும்.

பிராமணன் பிரம்மோபதேசம் பெற்றமையால் உயர்வுடையவன். பிரம்மோபதேசம் பெற்றமைக்கு அடையாளமாகப் பூணூல் தரித்துக்கொள்ளுகிறான். பிரம்மோபதேசம் பெற்றவன் தனது மரணம் வரை இடைவிடாது செய்ய வேண்டிய ஒரேஒருசெயல் காயத்திரீ வழிபாடாகும். அது சந்தியாவந்தனம் என்று சொல்லப்படும். காலை, உச்சி, மாலை என்னும் மூன்று காலங்களிலும் தவறாது சந்தியாவந்தனம் செய்தல் வேண்டும்

"காயந்தம் த்ராயதே இதிகாயத்ரீ"

தன்னைக்குறித்துத் துதிசெய்பவனைக் காப்பவள் காயத்திரீ என்பது சொற்பொருளாகும். சந்த்யாதேவியானவள் காலையில் காயத்திரீ என்றும், மத்தியானத்தில் சாவித்திரீ என்றும், மாலையில் [illegible] என்றும் போற்றப்படுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியாவந்தனஞ்செய்வதில் அர்க்கியங்கொடுத்தல் முக்கியமான செயல்களுள் ஒன்ருகும். அதனைக் காலக்கட்டுப்பாடு தவருமல் செய்யவேண்டும்.

"காணுமல் கோணுமல் கண்டுகொடு" என்று அது பற்றி ஒருவாக்கியம் உள்ளது. அதாவது சூரியனைக் காண முன்னும், சூரியன் உச்சிக்கு நேராகும்போதும், சூரியன் அஸ்தமிக்கமுன்னும் அர்க்கியம் கொடுக்க என்பது கருத்து

இன்னும் "காயத்திரீ" என்ற சொல்லின் நுண்பொருள் மூலமந்திரம் என்ற பொருளுடையது. வேறு அடைசொல் இல்லாமல் "காயத்திரீ" என்று சொல்லுமிடத்து அது சிவசக்தி சுவருபமாகவுள்ள பரப்பிரம்மத்தின் மூலமந்திரத்தையே குறிக்கும். ஏனைய மூர்த்திகளுக்குரிய மூலமந்திரங்களைத் தனித்தனியாகக் குறிக்கும் இடங்களிலெல்லாம் அவ்வம்மூர்த்திகளின் பெயரை அடைசொல்லாக முன்வைத்து இன்ன காயத்திரீ என்று சொல்லப்படுவதைக் காணலாம். உதாரணமாக - சதுர்முக காயத்திரீ, விஷ்ணு காயத்திரீ, உருத்திர காயத்திரீ, கணேச காயத்திரீ, ஸ்கந்த காயத்திரீ என்பனமுதலாக அமையும். எந்தக் காயத்திரீ மந்திரமானுலும் 24 எழுத்துக்கள் கொண்டதாகவே இருக்கும். பிரம்ம காயத்திரீ - வேதத்தின் சாரமாக அமைந்த மூலமந்திரமாதலால் அப்பெயர் பெற்றது. அக்காரணத்திஞலேயே, பிரம்மோபதேசம் எனப்படும் உபநயனச்சடங்கின் போது எவருக்கும் விகற்பமின்றி முதன்முதலாக உபதேசிக்கப்பெறும் பெருமையை உடையதாகிறது.

காயத்திரீ மந்திரத்திலுள்ள 24 எழுத்துக்களின் தத்துவம், மூர்த்தி, பயன் என்பவற்றை காயத்திரீ கல்பம் விரிவாகக்கூறுகிறது. அவற்றை அறிவதனுல் காயத்திரீ மந்திரப் பெருமை ஒருவாறு புலப்படும்.

இவ்வளவு பெருமைவாய்ந்த காயத்திரீதேவியை என்றும் நினைவிற்கொள்ளவேண்டும் என்று கருதியே, அகில பிராமண குருசமூக சேவாசங்கத்தலைமைக் காரியாலயமாகவும், ஞானதீபக் காரியாலயமாகவும் அமைந்து யாழ்ப்பாணத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில பிராமண குரு சமூக சேவா சங்கத்து
## முதலாம் வருடாந்த
# விசேஷ மகாநாட்டு வரலாறு
### வித்துவான் கணேசையர் அரங்கு

யாழ்ப்பாணம், நல்லூர்ச்சிவன்கோவில் வசந்த மண்டபத்தில் விசுவாவசு ஸ்ரீ ஆனி மீ 5 உ (19-6-65) சனிக்கிழமை மாலை, **அகில பிராமண குரு சமூகசேவா சங்கத்து முதலாம் வருடாந்த விசேஷ மகாநாடு.** வித்துவான் கணேசஐயர் அரங்கில், சிவ ஸ்ரீ. ச. கணபதீசுவரக் குருக்கள் தலைமையில் ஆரம்பமாகியது.

நல்லூர், கைலாசபிள்ளையார் சந்நிதியிலிருந்து மாலை 6 மணியளவில் மங்கல வாத்தியத்துடன் புறப்பட்ட சிவாகம ஏட்டுச் சுவடி ஊர்வலம் மகாநாட்டு மண்டபத்தை அடைந்ததும் வேதபாராயணம், தேவாரபாராயணம் என்பவற்றுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ. ஐ கைலாசநாதக் குருக்கள் அவர்கள் ஆரம்பஉரை நிகழ்த்தி, வித்துவான் கணேசஐயர் அரங்கைத் திறந்து வரவேற்பு உரையும் கூறினர்கள்.

கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்ற அகில இலங்கைச் சைவசமயக் குருமார் சபையும், சென்ற இரு ஆண்டுகள் நடைபெற்ற பிராமண சமூக சேவாசங்கமும் ஒன்றாக இணைந்து சென்ற ஆண்டில் "அகில பிராமண குரு சமூகசேவா சங்கம்" என்றபெயருடன் உருவாகிச் செயலாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியது எனறும்; இன்னும் இச்சங்கம் வளர்ந்து பொதுவாகச் சைவசமயத்துக்கும் சிறப்பாகப் பிராமண சமூகத்துக்கும் பயன்படும் வண்ணம் சேவை செய்வதற்கு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதாகவும் தலைவர் தமது தலைமையுரையிற் கூறினர்.

"திருக்குறள் காட்டும் அறம்" என்ற தலைப்பில் பேசத் தொடங்கிய வித்துவான் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள், அறவழி வாழ்க்கை என்பது தருமநெறியாக வாழுதலே என்றும், அது மக்கள்

---

*பிரப்பங்குளம் வீதியிலுள்ள 15 ஆம் இலக்க மண்டபம் காயத்திரி பீடம்" எனப்பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அகில, பிராமண குருசமூகம் காயத்திரி உபாசனையால் பயன் அடைவதாக.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவராலும் பின்பற்றப்பட வேண்டும் என்றும்; அந்தணர் சமூகத்தவர்கள் தாமும் அறநெறியில் வாழ்ந்து ஏனையோரையும் அவ்வாறு வாழ்விப்பவரென்றும் அதனை விளக்குவதற்கு-

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்ற குறள் ஒன்றே போதுமானது என்றும்; இராமாயணம், பாரதம் என்பவற்றில் விரித்துக் காட்டப்படும் அறநெறிகள் யாவும் திருக்குறளில் சுருக்க விளக்கமாகச் செறித்துக் காட்டப்பட்டிருக்கின்றனவென்றும் அழகாகப் பேசினார்.

"திருவாசகம் என்னுந்தேன்" என்று பேசத்தொடங்கிய வித்துவான் பொன்-கனகசபை அவர்கள், கடவுள் பக்தி ஒன்றே மனித வாழ்வு பயன்படுவதற்கு ஏற்றது என்றும்; பிராமண சமூகத்தவர் அனுதினமும் செய்து வரும் பணிகள்யாவும் பக்தி நெறியை வளர்ப்பனவே என்றும்; பக்திமார்க்கத்தை அனுசரிப்பதற்குத் திருவாசகம் சிறந்த ஒருவழிகாட்டி என்றும் பலபடவிரித்துக்கூறி ஆங்காங்கு திருவாசகப் பாடல்கள் பலவற்றைத் தேன்மாரி எனப்பாடினார்கள்.

பாராட்டுரை நிகழ்த்திய வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராமசாஸ்திரிகள் அவர்கள் பிராமணர்களுக்குச் சிறந்த அறச்செயலாகவுள்ளது மூன்றுவேளை செய்யப்படும் சந்தியாவந்தனமேயென்றும், அவற்றுள்ளும் காலையும் மாலையும் செய்யப் படுவதற்கே "சந்தியா" என்று பெயர் என்றும், அதனால் வரும் பெறுபேறு தெய்வபரமானது என்றும். உச்சிவேளை வழிபாட்டுக்கு மாத்தியாந்நிகம் என்று பெயர் என்றும், அதுவே ஆன்மபரமானது என்றும் கதைமூலம் நன்குவிளக்கிப் பேசினார்கள்.

பிரமஸ்ரீ. தி. ச. தியாகராஜ ஐயர் அவர்கள் நன்றியுரை கூறினார்கள். முத்தமிழ்மணி பிரமஸ்ரீ O. S. S. மணிபாகவதர் அவர்கள் "சிவபூஜையால் சிரஞ்ஜீவித்துவம் பெற்ற செல்வன்" என்ற தலைப்பில் மார்க்கண்டேய சரித்திரத்தைப் பக்கவாத்தியங்களுடன் இனிய கதாகாலட்சேபமாக நடத்தியபோது, யமன் செய்த தவறு இன்னதுதான் என நுட்பமாகக் கூறினார்கள். அதாவது:- சிவலிங்கப் பெருமான் வேறு மார்க்கண்டேயர் வேறு எனப்பிரிக்க முடியாதவாறு அச்சிறுவர் தாம் பூஜைசெய்த சிவலிங்கப் பிரானைத் தழுவியபடி இருக்க யமன் மார்க்கண்டேயரைக் குறித்து வீசிய பாசம் சிவலிங்கப்பிரானையும் சேர்த்து இழுத்தது என்பதேயாம். இவ்வளவில் விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

## முன்னேசுவரம் தேவஸ்தான ஆதீன
## சோமாஸ்கந்தக் குருக்கள் அரங்கு

இரண்டாம் நாள்: 20-6-65 ஞாயிறு பிற்பகல் மேற்படி மகாநாட்டு நிகழ்ச்சியின் இரண்டாம் [illegible] தொடங்கியது. அதே மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முன்னேசுவரம் தேவஸ்தான ஆதீனம் சோமாஸ்கந்தக்குருக்கள் அரங்கு'' என அமைவுற்றது. மாவிட்டபுரம் சுப்பிரமணிய தேவஸ்தான ஆதீனத் தலைவர் பிரம்மஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் அவர்கள் தலைமை வகித்தார்கள். வேதபாராயணம், தேவாரம் ஓதுதல் என்பவற்றுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. யாழ்ப்பாண மாவட்டக் காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம் அவர்கள்:- ''சைவசமயம் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது என்றும்; ஏனைய சமயங்களில் சமயக் கட்டுப்பாடுகள் நிரம்ப உண்டு என்றும்; சைவ சமயத்தில் அப்படியான சமயக் கட்டுப்பாடுகள் இல்லை என்றும்; அப்படி இருப்பது ஒருவழியில் நன்மையும் பிறிதொரு வழியில் தீமையும் பயக்கிறது என்றும்; சைவ சமயக் குருமார் சிறப்படைவதாலேயே சமயநெறி பரக்குமென்றும்; குருமாரை ஆதரிப்பது சைவப் பொதுமக்கள் கடமையாம்" என்றுங் கூறி அரங்கைத் திறந்து வைத்தார்கள்.

"ஞானதீபம்" பத்திராசிரியர் பிரமஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா அவர்கள்:- முன்னும் பின்னும் ஐயர் அரங்குகள் பக்கபலமாக இருக்க மத்தியில் குருக்கள் அரங்கு நடுநாயகமாக அமைகிறதென்றும்; ஈழத் திருநாட்டிலே குருக்களுள் வசித்த மகான்களுள் ஒருவராக சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் கல்வியறிவினாலும் கைவண்ணத்தினாலும் மதிப்புவாய்ந்தவரென்றும்; அவர் பெயரைத்தாங்கிய அவ்வரங்கு நிகழ்ச்சிகள் சிறப்படைவதற்கு யாவரையும் வருக, வருக" என்றுங்கூறி வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

தலைவர் பிரமஸ்ரீ சு. துரைசாமிக்குருக்கள் அவர்கள் தமது தலைமை உரையில்:- ''முன்னேசுவரம் சோமாஸ்கந்தக் குருக்கள் ஒரு சிறந்த மேதாவி என்றும்; அவர் தமது தந்தையாரது நெருங்கிய நண்பர் என்றும்; அவர் பெயராலமைந்த அரங்கிற்குத் தலைமை தாங்குவதில் பெருமை கொள்வதாகவும் கூறினார்கள்.

" விஞ்ஞான வாழ்வில் சமயத்தின் பங்கு '' என்ற தலைப்பில் முதலாவதாகப் பேசத் தொடங்கிய நீர்கொழும்பு - ஆசிரியர் திரு S. சோமாஸ்கந்தன் அவர்கள் விஞ்ஞானம் என்பது விசேஷ ஞானம் என்றும், அது மக்களை அழிவுப்பாதைக்கு வழி நடத்தாது ஆக்க நெறியைக் காட்டுவதோடு மாத்திரம் அமைவதன்றி மெய்ஞ்ஞான வாழ்வுக்கு மூலாதாரமானது என்றும் தெளிவான எடுத்துக் காட்டுகளுடன் சிறந்த உரை நிகழ்த்தினார்கள். அதனை அடுத்து " எமது சமூகத்தின் எதிர்காலம் '' என்பது பற்றி பிரமஸ்ரீ சோ. இராமசந்திரக் குருக்கள் அவர்கள் பேசத்தொடங்கிப் பல உண்மைகளை விளக்கி மிக ஆர்வத்துடன் பேசினார்கள். ''தர்ம சாஸ்திரம்'' என்பதுபற்றி சிவஸ்ரீ க. சாம்பசிவக் குருக்கள் M. I. H; அவர்கள் பேசத்தொடங்கி அறநெறியின் உண்மைகளை அழகாக விளக்கிக் கூறினார்கள். பிரமஸ்ரீ சோ. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள் நன்றியுரை கூறினார்கள். நாதஸ்வர இன்னிசைவிருந்துடன் இரண்டாம் அரங்கு நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாந்திரம் சதாசிவ ஐயர் அரங்கு

மூன்ருவதாக, 20-6-65 ஞாயிறு இரவு 7-30 மணிக்கு அதே மண்டபத்தில், கலாநிதி பிரமஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் M. A. Ph. D. அவர்கள் தலைமையில், முகாந்திரம் சதாசிவ ஐயர் அரங்கில் இறுதி நிகழ்ச்சிகள் வேதகோஷம் தேவாரபாராயணம் என்பவற்றுடன் ஆரம்பமாகியது.

வடமகாண உதவி அரசாங்கஅதிபர் திரு. ஆ. பெருமையினுர் அவர்கள்:- சைவ ஆலயங்கள் வழிபாட்டு இடங்களாக மாத்திரம் இருப்பதோடு அமையாது, அரசியல்துறையில் ஈடுபடாது இதுபோன்ற சமய சம்பந்தமான பேச்சுக்களினுலும், கலந்துரையாடலினுலும், மக்களைச்சமயத் துறையில் ஈடுபடச்செய்யவேண்டும் என்றும் இச் சங்கத்தினர் நடாத்தும் இந்த மகாநாட்டில் முகாந்திரம் சதாசிவஐயர் அரங்கைத் திறந்து வைக்கும் வாய்ப்புக்கிடைத்ததைப்பற்றிப் பெருமை கொள்வதாகவும் கூறி அரங்கைத் திறந்து வைத்தார்கள்.

கௌரவ பொதுக் காரியதரிசி பிரமஸ்ரீ ப. வித்தியானந்த சர்மா அவர்கள் யாவருக்கும் வரவேற்புக் கூறினுர்கள். தலைவர் தமது தலைமையுரையில் "ஒரு மனிதனது உடலுறுப்புக்கள் ஒன்றுபட்டு ஒவ்வொரு துறையில் உழைப்பதனுலேயே அவன் சுகமாக வாழ முடிகிறது என்றும்; உறுப்புக்களில் உயர்வு தாழ்வு பாராட்டப்படுதல் இல்லையென்றும்; அவ்வாறே உலகமாகிய இந்தப் பெரிய உடலுக்குப் பிராமண சமூகம் முகமாக உள்ளது என்றும்; ஞானேந்திரிய கேந்திரமாகிய தலைக்குள்ள பெரும் பொறுப்புப்போல பிராமண சமூகத்தவர் உலக க்ஷேமத்திற்காக உழைக்கவேண்டிய மகத்தான கடப்பாடு உடையவர் என்றும், ஏனைய சமூகத்தவர்களுக்கு அந்தணர் வழிகாட்டிகளாகவேண்டும் என்றும்; எல்லாச் சமூகத்தவரும் ஒருவருக்கொருவர் ஆதாரமானவர் என்றும் சிறப்பாகக் கூறினுர்கள். "குருவும் சீடனும்" என்ற தலைப்பில் திருவாளர் அம்பிகைபாகன் B. A. அவர்கள் உபநிடத உண்மைகளை நன்கு விளக்கிக் கூறினுர்கள். "சைவசமயமும் குருமாரும்" என்ற விஷயமாக இளைப்பாறிய உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் அவர்கள் சைவ சமய அடிப்படையான உண்மைகள் யாவும் குருமூலமாகவே உலகுக்குப் பயன்படுவன என்று பலபட விரித்துப்பேசினுர்கள். "சங்கத்தின் திட்டங்கள்" என்பதுபற்றி பிரமஸ்ரீ ப. வித்தியானந்தசர்மா அவர்கள் விளக்கமாகக் கூறினுர். பாராட்டுரைகூறிய "ஈழநாடு" பத்திராசிரியர் பிரமஸ்ரீ கி. பி. ஹரன் அவர்கள் காயத்திரீ தத்துவத்தை இலகுவாக அழகாகக் கூறினுர்கள், பண்டிதர் பிரமஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா அவர்கள் நன்றியுரை கூறினுர்கள். பிரமஸ்ரீ A. சங்கர ஐயர் கோஷ்டியினரது இன்னிசை விருந்துடன் விழா இனிது நிறைவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக சாந்தி

[சிவாசாரியன்]

பிரயோகம்

## சூர்ய ஆவாகனம் (வைதிக முறை)

ப்ரணவஸ்ய - ப்ரஹ்மா ருஷி:, தேவீ காயத்ரீ சந்த:, பரமாத்மா தேவதா। பூராதி வ்யாஹ்ருதி த்ரயாணாம் - ஜமதக்நி பரத்வாஜ ப்ருகவோ ருஷய:, தேவீ காயத்ரீ சந்த:, அக்நி வாயு ஸூர்யா தேவதா:। ஆக்ருஷ்ணேதி ஸூர்ய மந்த்ரஸ்ய - ஹிரண்யஸ்தூப ருஷி:, த்ரிஷ்டுப் சந்த:, ஸவிதா தேவதா, ஸூர்யாவாஹநே விநியோக:॥

ஓம் ஆக்ருஷ்ணேந ரஜஸா வர்த்தமாநோ நிவேசயந்நம்ருதம் மர்த்யஞ்ச। ஹிரண்யயேந ஸவிதா ரதேநா தேவோ யாதி புவநா விபச்யந்॥

ஓம் பூர்புவஸ்ஸுவ:। ஸூர்யக்ரஹ ஜபாகுஸுமத்யுதிம், ஸூர்யக்ரஹம், ரக்தவர்ணம், ரக்தவஸ்த்ரம், ரக்தமால்யம்

---

### சூர்ய ஆவாகனம்

அழிவற்ற (ஏனைய ஒளிகளால் அடக்கப்படாத) பேரொளியினால் எங்கும் நிறைந்தும், இறப்பில்லாத தேவர்களையும் மனிதர்களையும் அவரவருக்குரிய செயல்களில் ஈடுபடுத்தியும், உலகிற்குச் செழிப்பைக் கொடுத்துத் தானே ஒளிர்பவருமாகிய சூரிய பகவான், தங்க மயமான தேர் ஊர்ந்து பதினன்கு உலகங்களையும் நன்கு பார்த்துக்கொண்டு (உயிர்களின் செயல்களுக்கெல்லாம் சாட்சியாகி) வான வீதியில் சஞ்சரிக்கிறார்.

ஓ! சூரிய தேவனே! இங்கு வருக. செந்நிறமுள்ளவரும், செந்நிறப்பூ, சிவப்புமாலை, சிவப்பு ஆடை, என்பவற்றைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரயாம், ரக்தச்சத்ர த்வஜ பதாகாதி ஶோபிதம், திவ்யர
தாரூடம், மேரும் ப்ரதக்ஷிணீகுர்வாணம், ப்ராங்மு
கம், பத்மாஸனஸ்தம், த்விபாஹும், ஸப்தாஶ்வம், ஸப்தரஜ்ஜும்,
கலிங்கதேஶாதிபதிம், காஶ்யப கோத்ரஜம், ப்ரபவ ஸம்வ
த்ஸர மாகமாஸ ஶுக்லஸப்தம்யாம் விஶாகா நக்ஷத்ரே ஜாதம், ஸிம்
ஹ ராஶ்யதிபதிம், பானுவார பூஜ்யம், கிரீடினம், ஸு
காஸீனம் பத்னீ - புத்ர - பரிவார ஸமேதம் - க்ரஹ
மண்டல ப்ரவிஷ்டம், அஸ்மின் அதிகரணே மத்யே வர்த்து
லாகார மண்டலே கோதூம தான்யே ஸ்தாபித ப்ரதிஷ்
டாயாம் ப்ரதிமாயாம் ஸூர்யம் ஸாங்க ஸவாஹனம் ஆவாஹயாமி ||

## சூர்ய அதிதேவதை அக்கினி

அக்னிம் தூதமிதி மந்த்ரஸ்ய மேதாதிதிர் ருஷி: காயத்ரீ ச்ச
ந்த:, அக்னிர்தேவதா ஸூர்யாவாஹனே விநியோக:|

---

தரித்தவரும், சிவப்புக் குடை, கொடி, தேர், பதாகை (விருதுக் கொடி) என்பவற்றைத் தாங்கியவரும், சிறந்த தேரில் ஊர்பவரும், மகாமேருமலையை வலம் வருபவரும், கிழக்கு நோக்கியவரும், பதும பீடத்தில் உறைபவரும், இரு கைகளோடு கூடியவரும், ஏழு குதிரைகளை உடையவரும், ஏழு கடிவாளங்களைக்கொண்டவரும், கலிங்க தேசாதிபதியும், காசிப கோத்திரத்தவரும், பிரபவ ஆண்டு மாசி மாச சுத்த சத்தமியில் விசாக நட்சத்திரத்தில் தோன்றியவரும் சிங்க ராசிக்குரியவரும், ஞாயிறு வாரத்தில் விசேட வழிபாட்டுக்குரியவரும், முடிதரித்துச் சுகமாக வீற்றிருப்பவரும், பத்தினி புத்திரன் பரிவாரங்களோடு கூடியவரும், கிரக மண்டலத்தில் வீற்றிருப்பவரும், இங்கு வட்ட வடிவமாக அமைக்கப்பட்ட மண்டல மத்தியில் கோதுமைத் தானியத்தில் தாபிக்கப்பட்ட பிரதிமையில் சூரிய பகவானாகிய உம்மை ஆவாகிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ருக்:) அக்3நிம் தூ3தம் வ்ருணீமஹே ஹோதாரம் விஶ்வவேத3
ஸம்। அஸ்ய யஜ்ஞஸ்ய ஸுக்ரதும்॥

ஓம் பூ4ர்பு4வஸ்ஸுவ:। ஸூர்யாதி4தே3வ அக்3நே இஹாக3ச்ச2, ஸூர்யாதி4தே3வதாம், ஸாங்க3ம், ஸாயுத4ம், ஸவாஹநம், ஶக்தி-பத்நீ-புத்ர-பரிவார-ஸமேதம், அக்3நிம் ஸூர்யாதி4தே3வஸ்ய த3க்ஷிணத: ஸ்தா2நே ஆவாஹயாமி॥ ஸூர்யாதி4தே3வ அக்3நே இஹ திஷ்ட2 என்றுசொல்லிச் சிவப்புப்பூ, அட்சதம், இவற்ருல் அக்கினியைத் தாபனம் செய்க.

## சூர்ய பிரத்தியதி தேவதை உருத்திரன்

(ருக்:) யேஷாமீஶே பஶுபதி: பஶூநாம் சதுஷ்பதா3முத த்3விபதா3ம்। நிஷ்க்ரீதோயம் யஜ்ஞியம் பா4க3மேது ராயஸ்போஷா யஜமாநஸ்ய ஸந்து॥

---

### சூர்ய அதிதேவதை அக்கினி

அந்த அந்தத் தேவர்களைக் குறித்துக் கொடுக்கப் படுகின்ற அவிர்ப்பாகத்தை ஏற்று அவ்வத் தேவர்களிடம் சேர்ப்பிக்கின்றவரும்; அவியை ஏற்றுக்கொள்ளும்படி தேவர்களை அழைப்பவரும்; எல்லாவற்றையும் அறிகின்றவரும்; இப்போது என்னுல் செய்யப்படும் நவக்கிரகசாந்தி என்னும் இவ்வழிபாட்டுச் செயல் நற்பயன் தருவதற்குரிய சாதனங்களை ஆக்குபவரும்; ஆகிய அக்கினி பகவானை, இப்பூஜையை ஏற்றருளும்படி. பிரார்த்திக்கிறேன்.

### சூர்ய பிரத்தியதிதேவதை உருத்திரன்

நேரில் காணப்படும் நான்கு கால்களை உடையனவும் இரு கால்களை உடையனவுமான ஆன்ம வருக்கத்துக்கு எதனுல் ஸ்ரீ உருத்திர [illegible]வர் இறைவனுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பூர்புவஸ்ஸுவ:| ஸூர்யமண்டலே ப்ரத்யதிதேவ ருத்ர இஹாகச்ச, ஸூர்யமண்டலே ப்ரத்யதிதேவதாம் ஸாங்கம், ஸாயுதம், ஸவாஹனம், ஶக்தி - பத்னீ - புத்ர - பரிவார - ஸமேதம் ஸூர்யமண்டலஸ்ய உத்தரத: ஸமவஸம் ருத்ரமாவாஹயாமி|| எனச் சூரியனுக்கு வடபாகத்தில் ஸ்ரீ ருத்திரனை ஆவாகிக்க. ஸூர்யமண்டலே ப்ரத்யதிதேவ ஸ்ரீருத்ர இஹ திஷ்ட எனச் சிவந்த புஷ்ப அட்சதையால் தாபிக்க.

---

ருரோ, அதனல். அந்த உருத்திர பகவான் பசுபதி எனப் பாராட்டுப் பெயர் பெறுகிறர். அந்த ஸ்ரீ உருத்திரமூர்த்தியிடமிருந்து இந்தப் பசு (யாக அவிர்ப்பாகம்) அநுமதிக்கப்பட்டதாகக்கொண்டு யாகத்துக்குரிய ப்ாகமாயிருத்தலை அடையவேண்டும். அதனல், யாக கருத்தாவுக்குச் செல்வப் பெருக்கம் முதலாகிய நற்பயன்கள் உண்டாகவேண்டும்.

இந்த மந்திரத்திலுள்ள விசேட விளக்கமாவது:- தனக்குச் சொந்தமில்லாத எந்தப் பொருளையும் எவராயினும் எடுத்துப் பிறருக்குக் கொடுத்தலாகாது. அப்படிச் செய்தல் அறநெறிக்கு மாருகும். உலகிலுள்ள உயிர்களும் உடைமையும் ஆகிய எல்லாம் ஸ்ரீ உருத்திரமூர்த்திக்கே உரிமையாக உள்ளன. ஆகவே அப்பெருமானுக்கு உரிய பொருளை (அவிர்ப் பாகத்தை) இன்ன தெய்வத்துக்கு உரிமையாகுக என ஒருவன் மந்திரஞ் சொல்லி ஒப்பித்தலாகிய ஓமத்தைச் செய்யும்போது அப்பொருளுக்கு உரியவரிடம் அநுமதி பெறவேண்டியது நியாயமேயாகும். அவ்வளவு சிறந்த கருத்தைக்கொண்டது இந்த உருத்திரமூர்த்திக்குரிய மந்திரமாம்.

ஒரு கிரகத்துக்கு அதிகாரியான தெய்வத்தையே "அதிதேவதை" என்றும்; அந்த அதிதேவதைக்கும் அதிகாரியான தெய்வத்தையே பிரத்தியதி தேவதையென்றும் சொல்வதாக விளங்கிக்கொள்ளுதல்வேண்டும்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபநிடத உண்மை விளக்கம்

— வைதிகன் —

தைத்திரீய உபநிடதத்து இரண்டாவது பிரச்சினமாகிய ஆனந்தவல்லியிலிருந்து இவ்விளக்கம் தொடருகிறது.

ஓம் குருசிடர்களாகிய எங்கள் இருவரையும் சேர்த்துப் பிரமமாகிய பரம்பொருள் காப்பாற்ற வேண்டும். எங்கள் இருவரையும் சேர்த்துப் போஷிக்க வேண்டும். நாங்கள் இருவரும் சேர்ந்து வீரியத்துடன் உழைப்போமாக. எங்கள் அத்தியயனம் (மறை ஓதுதல்) நுட்பமுள்ளதாகவும் ஒளியுள்ளதாகவும் ஆகவேண்டும். நாம் இருவரும் ஒருவரையொருவர் ஒருபோதும் வெறுக்காமல் இருக்க வேண்டும்.

ஓம் மூவகையிலும் சாந்தி உண்டாகுக.

பிரமமானந்தமே அகிலம் எங்கும் நிறைந்திருக்கிறது. அதில் ஓர் அணுவளவு மாத்திரமே அவ்வப்போது உலகில் விஷய ஆனந்தமாய் அனுபவிக்கப்படுகிறது. பரம்பொருளாகிய இறைவன் அங்குத்தான் உளன்-இல்லை, இங்குத்தான் உளன் என்று பிரித்துக் கூற முடியாதவாறு எங்கும் விரிந்த ஒளியாய், இன்ப நிறைவாக இருக்கின்றான்.

பிரம்மத்தை அறிந்தவன் பரமநிலையை (மேலான தன்மையை) அடைகிறான். அந்தப் பிரம்மத்தைப்பற்றி இனிக்கூறப்படுகிறது. உண்மை, அறிவு, எல்லையற்ற தன்மை என்னும் இயல்பையுடையது பிரம்மம். இதய குகையில் பரமஆகாசத்தில் இருக்கும் இந்த பிரம்மத்தை எவன் அறிகிறானோ அவன், எல்லாவற்றையும் இயற்றாது இயற்றிப்பார்த்துக் கொண்டிருக்கும் பரப் பிரம்மத்துடன்கூடி எல்லா ஆசைகளையும் அனுபவிக்கிறான். எப்போது ஐம்புலன்களும் ஐம்பொறிகளும் மனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் ஒடுங்குகின்றனவோ, புத்தியும் அசைவற்று நிற்கிறதோ அப்போது பரமாத்மாவை அனுபவிக்கிறான் (இது வேதாந்தபரிபாஷை). பரமாத்மா மஹத் என்ற தத்துவமாகும். அந்தத் தத்துவத்திலிருந்து முதலில் ஆகாசம் தோன்றியது. சப்த தன்மாத்திரை எனப்படும் ஒலி மாத்திரம் உடையது ஆகாசம் ஆகும். ஆகாசத்திலிருந்து வாயுதோன்றியது. சத்தம், பரிசம்எனும் இரு குணங்களையுடையது வாயு. வாயுவிலிருந்து தோன்றியது தீ. சத்தம், பரிசம், ரூபம் என்னும் மூன்று குணங்களையுடையது நெருப்பு. நெருப்பிலிருந்து தோன்றியது நீர். சத்தம், பரிசம் ரூபம், ரசம் என்னும் நான்கு குணங்களையுடையது நீர். நீரிலிருந்து தோன்றியது மண். சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்து குணங்களையுடையது நிலம். மண்ணிலிருந்து செடி கொடிகள் தோன்றின. அவற்றிலிருந்து அன்னம் (உணவு) தோன்றியது. அன்னத்திலிருந்து மனிதன் தோன்றினான். அவ்வாறு தோன்றிய மனிதன் அன்னரசமே உருவானவன்,

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் என தென்றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே"

என வருந் திருவாசக வாக்கும் இவ்வுண்மைக்கு ஆதாரமாகும்.

உலகபந்தம் எனப்படும் பெருமரத்தில் இருந்து கொண்டு புண்ணியம் பாவம் எனப்படும் பழங்களைப் பூசித்து வாழ்வதால் சீவனாகிய ஆன்மாவைப் பறவையாக உருவகித்துச் சொல்லுவர்.

பூமியில்உள்ள மக்கள் யாவரும் அன்னத்திலிருந்தே உண்டாகின்றனர். அன்னத்தினாலேயே உயிர் வாழ்கின்றனர். இறுதியில் அன்னத்தினாலேயே முடிவடைகின்றனர் எல்லாப் பொருள்களுக்கும் முதலில் தோன்றியது அன்னம். அதனால் அன்னம் பசிப்பிணி மருந்து. எவர்கள் அன்னத்தை பிரம்மம் என வழிபடுகிறார்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அன்னத்தை அடைகிறார்கள். அன்னத்திலிருந்து உயிர்வருக்கம் உண்டாகிறது. உண்டானவை அன்னத்தினால் வளர்கின்றன. பிராணிகளால் உண்ணப்படுவதனால் "அன்னம் அத்யதே" என்றும் பிராணிகளை உண்கின்றமையால் "அன்னம் அத்தி" என்றும் சொல்லப்படுகிறது. அதனால் "அன்னம்" என்பது காரணப் பெயராகும்.

இதுவரையும் சொல்லிய அன்னரசமயத்தின் வேறானது இதனுள்ளிருக்கும் பிராணமய ஆன்மாவாகும். இந்த அன்னமய சரீரம் பூரணமானது. புருஷனைப்போலவே உருவுடையது. பிராணமய சரீரமும் அன்னமய சரீரம் போன்ற புருஷவடிவுடையதாயினும் அதற்கு வேறான தனியுருவம் இல்லை. அதற்குப் பிராணனே தலை, வியானன் வலப்புற இறகு; அபானன் இடப்புற இறகு; ஆகாயம் நடுவுடல்; ஆதாரமான பிருதிவி வால். அதனைப் பற்றிப் பின்வரும் மந்திரம் விளக்கம் தருகிறது. பிரமத்திலிருந்து மனிதப் படைப்பு ஒழுங்கைப் படிப்படியாகக் கூறிப் பின் அந்தப் பிரமம் எப்படி இச்சரீரத்துக்கு உள்ளொளியாகவும் அனைத்துக்கும் ஆதாரமாகவும் இருக்கிறது என்பதைத் தெளிவாக விளக்கும் பொருட்டு அன்னமய கோசத்திலிருந்து ஆகாயவடிவமான ஆனந்தமய கோசம் வரையும் ஒழுங்காக வர்ணிக்கப்படுகிறது.

அக்கினி முதலிய தேவர்கள் வாயுரூபியான பிராணனை அநுசரித்தே தத்தம் தொழிலைச் செய்கின்றனர். மனிதர்களும் மிருகங்களும் அங்ஙனமே செய்கின்றன. பிராணன் பிராணிகளுக்கெல்லாம் ஆயுளாக இருப்பதனால் அது "சர்வாயுஷம்" எனப்படுகிறது. எவர்கள் பிராணனை பிரம்மம் என உபாசிக்கிறார்களோ அவர்கள் பூரண ஆயுளை அடைகிறார்கள். பிராணிகளுக்கெல்லாம் ஆயுளாக இருப்பதனாலன்றோ பிராணன் "சர்வாயுஷம்" எனப்படுகிறது. முற்பட்டதற்கு இந்தப் பிராணமயமே சரீரம்படைத்த ஆத்மா. இதுவரை கூறிய இந்தப்பிராணமயத்தினும் வேறானது இதனுள்ளிருக்கும் மனோமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மா. அதனால் இது பூரணமானது. அதுவும் புருஷ உருவுடையது. அந்த மனோமய புருஷவடிவம் இந்த பிராணமய புருஷவடிவத்தைப்போலவே அந்தஅந்தஇடத் துக்குரிய எண்ணங்களாலும் வார்த்தைகளாலும் இயங் கும். அந்த மனோமயபுருஷனுக்கு யஜுர்வேதமே தலை; இருக்குவேதமே வலப்பக்கம்; ஸாமவேதமே இடப்பக்கம்; வேத ஆதேசமே நடுவுடல், அதர்வவேதமே ஆதாரமான வால். அதனைத் தொடர்ந்து பின்வரும் மந்திரம் அமைகி றது. மேலும், இருதய குகையிலுள்ள பிரம்மதத்துவம் ஒரு கோவிலின் மூலத்தானத்திலுள்ள மூர்த்தியாகக்குறிக் கப்பட்டால், வீதிகள் கோசங்களாகக் குறிக்கப்படும். அன்னமய கோசம் முதல் வீதியும் வெளிக்கோபுரமுமாகி பிரம்மஜ்ஞானத்துக்கு வழியாகிறது. படைப்பானதுபஞ்ச பூதங்கள் பிராணன், மனம், விஞ்ஞானம், ஆனந்தம் என்று படிப்படியாக உயர்ந்து செல்லுகிறது. விஜ்ஞா னம் நாலாம்படியாம்,

மனத்திற்கும் மனமாகிய எல்லையை எட்டிப்பிடிக்க முடியாமல் எந்த அளவில் வாய்ச்சொற்கள் திரும்பிவிடு கின்றனவோ அதுவே பிரம்மானந்த நிலை அதனையறிந் தவன் ஒருபோதும் அஞ்சமாட்டான். முற்பட்ட அதற்கு இதுவே சரீரம் படைத்த ஆத்மாபோன்றது. இதுவரை கூறிய மனோமயத்திலும் வேறான து இதனுள்ளிருக்கும் விஜ்ஞானமய ஆன்மா. அதனால் இது பூரணமானது. அது வும் புருஷவடிவுடையது. விஜ்ஞானமய வடிவம், மனோ மயவடிவம் போன்றதே. விஜ்ஞானமய வடிவத்துக்கு ஊக்கமே தலை, ஒழுங்கே வலப்புற இறகு. உண்மையே இடப்புற இறகு, சமாதி நடுவுடல், ஆதாரமான மஹத் தத்துவம் வால்,

மனோமயமாய் விளங்குவது மனத்துக்கும் மனமாகிய பரம்பொருளே ஆதலால் அந்த மனோமயம் மனத்துக்கும் எட்டாதது,

'உன்றுமனம் கருப்பூர வுன்னைப்போலே கரைய
மின்றும் ஆனந்த விளக்கே பராபரமே'' — தாயுமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை" — திருநாவுக்கரசர்

"அச்சமில்லை அமுங்குதலில்லை
நடுங்குதலில்லை நாணுதலில்லை
பாவமில்லை பதுங்குதலில்லை
ஏதுநேரினும் இடர்ப்படமாட்டோம்
அண்டஞ்சிதறினால் அஞ்சமாட்டோம்
கடல்பொங்கியெழுந்தால் கலங்கமாட்டோம்
யார்க்கும் அஞ்சமாட்டோம் எதற்கும் அஞ்சோம்
எங்கும் அஞ்சோம் எப்பொழுதும் அஞ்சோம்"
(விநாயகர் அகவல் -- பாரதி) — தொடரும்.

---

# ஸ்ரீ லங்கா பிரம்ம வித்யார்த்தி சபா

ஸ்ரீலங்கா பிரம்ம வித்யார்த்திசபையின் முதலாம் ஆண்டறிக்கை கிடைக்கப்பெற்றோம். அதிலிருந்து அறியத்தருவன.-

இப்பெயர்கொண்ட சபையொன்று, குரோதிவருடம் சித்திரை மாசத்தில் ( 15-4-1964 ) பிராமணச் சிறுவர் சிலரது நன்முயற்றி காரணமாக யாழ்ப்பாணம், நல்லூர், கைலாசபிள்ளையார் கோவிலடியில் இல. 93 கோவில்வீதியில் ஸ்தாபிதமாகி நடைபெற்று வருகிறது. அதன்
போஷகர்: பிரமஸ்ரீ கே. சுப்பிரமணியன் நியாய சிரோமணி அவர்கள்.
தலைவர்: பிரமஸ்ரீ பா. அருணசலம். உபதலைவர் பிரமஸ்ரீ கி. சதாசிவசர்மா
காரியதரிசி: பிரமஸ்ரீ கு. சிதம்பரநாதசர்மா. உப காரியதரிசி பிரமஸ்ரீ சு. மகேசுவரசர்மா
தனாதிகாரி: பிரமஸ்ரீ நா. ஞானசம்பந்தசர்மா. உபதனாதிகாரி ச. பாலகிருஷ்ணசர்மா
நிர்வாகசபை அங்கத்தவர் - ஒன்பது பேர்

இச்சபையின் நோக்கம்- பிராமணச் சிறுவர்களுக்கு சம்ஸ்கிருதக்கல்வியறிவை வளர்த்தலாகும். அதன் பொருட்டுக் குறித்த இல்லத்தில் சம்ஸ்கிருத பாடசாலை யொன்றைத் தொடக்கி நடாத்திவருகிறது. இச்சபையின் நன்முயற்சியினால் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் சென்ற ஆண்டில் நடாத்திய சம்ஸ்கிருத பாலபண்டித பரீட்சையில் பிரமஸ்ரீ ப. அருணசலம், பிரமஸ்ரீ கு. சிதம்பரநாதன் என்னும் இருவரும், சம்ஸ்கிருத பிரவேச பண்டித பரீட்சையில் பிரமஸ்ரீ கி சதாசிவம், பிரமஸ்ரீ சு. மகேசுவரன் என்னும் இருவரும் சித்தி பெற்றிருக்கின்றனர்.

மேலும், இவ்வாண்டில் குறித்தசபை நடாத்தவிருக்கும் சம்ஸ்கிருத வகுப்புக்களைப் பற்றியும், பாடத்திட்டம் பற்றியும் விரிவான விளக்கமும் தரப்பட்டிருக்கிறது.

இச்சபையாரின் நன்முயற்சி இறைவன் திருவருளால் மேன்மேலும் அபிவிருத்தி படைவதாக. [ப-ர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[எமது சங்கம்]

# செயற்படுத்தத்தகும் திட்டங்கள்

அனுரதபுரி, ஆசிரியர் பிரமஸ்ரீ. ந. கந்தசாமி ஐயர்

1 பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர்களில், கதிர்காம யாத்திரைக்குச் செல்பவர்களை ஒன்றுசேர்த்துப் பிரயாணவசதி, உணவுவசதி, விடுதிவசதி என்பவைகளை அவர்களுக்கு எமது அகில பிராமண குரு சமூகசேவா சங்கம் செய்துகொடுத்தால், அவர்கள் தமது ஆசாரம், மதிப்பு ஆகியவற்றைப் பாதுகாத்துக்கொள்ள மிகவாய்ப்பு உண்டாகும்.

இலவச புகையிரதச் சீட்டுப் பிரயாண வசதியுள்ளவர்களை ஒருகூட்டாக்கி, புகையிரதமூலமாகவும், ஏனையவர்களைப் பிறிதொரு கூட்டாக்கி (பஸ்சோ, வானோ, போன்ற) வாகன வசதி செய்வதன் மூலமாகவும் யாத்திரையைக் குறைந்தசெலவில் மிகுந்த பயனுடையது ஆக்கலாம்.

2. பாடசாலையிற்கற்கும் ஏனைய சமூகச் சிறுவர்களுடன், பிராமண சமூகப்பிள்ளைகளும் சேர்ந்து, தமதுகுல ஆசார அநுட்டானங்களுக்கு ஏற்றவாறு சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு இப்போது வசதிகள் இல்லை, அதனால், எமது சங்கம் "பிராமணசமூகப் பிரயாணவசதிக் குழு" என்ற பெயருடன் எமது அங்கத்தவரிடையே ஒரு செயற்குழுவை நிறுவி அதன் மூலம்ஆண்டுதோறும் ஒன்றோ, பலவோ சுற்றுப்பிரயாண வசதிசெய்தால் பிராமணச்சிறுவர் பெரிதும் பயனடைவர்.

3 பிராமணக் குருமார், தாம் புரோகிதம் செய்யும் இடங்களில் நடைபெறும் ஒவ்வொரு விசேஷங்களிலும் எமது சங்கத்தின் அபிவிருத்திக்கு என ஒருதானமாவது வாங்கி, அதைச் சங்கத்துக்குச் செலுத்துவதோடு, சங்கத்தின் ஆசிச்செய்தி தாங்கிய மடலைத் தானம் தந்தவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும். இது விஷயத்தில் அக்கறையுடனும், கண்ணியத்துடனும் இருக்கும் குருமார்களை எமதுசங்கம் ஆண்டுதோறும் கௌரவித்து, அவர்களுக்கு விருதுகளை வழங்கவேண்டும்.

4. எமது சங்கம், பிராமண வாலிபர் இயக்கம் (Brahmin's youth League) ஒன்றை ஸ்தாபிக்கவேண்டும். அதன்மூலம் பிராமணச் சிறுவர்களை ஒரு கூட்டாகத் திரட்டிப் பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் தொடர்புகளையும் வளர்க்கவேண்டும். பிராமண ஆசார அநுட்டானங்களுக்கு உரிய முறையில் சிறுவர்களின் கல்விவளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, உடல்வளர்ச்சி நாட்டு மக்களின் பொதுநல உதவிவளர்ச்சி என்பவற்றில் இவ் வியக்கம் முற்பட்டு உழைக்கவேண்டும் அதற்கு உதவியாகப் பிராமணச் சிறுவர்களிடையே பேச்சுத்திறன், எழுத்துத்திறன், வேதாகம மந்திரங்களை முறைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி ஓதுந்திறன், புராண இதிகாசக் கருத்துக்களை ஆராய்ந்து சம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் என்னும் மும்மொழிகளிலும் வெளியிடுந் திறன், விஞ்ஞான அறிவுத்திறன், சிற்ப சித்திரக் கைவேலைத்திறன். விளையாட்டுத் திறன் இவைபோன்ற துறைகளில் போட்டிகளை நடாத்தி அவற்றில் முதன்மைபெறும் திறமைசாலிகளுக்கு விருதுகள் வழங்கவேண்டும். இதற்கான பரிசில்களை வழங்குவதற்கு நாட்டிலுள்ள சிவநேயச் செல்வர்களான பிரபுக்கள் மனப்பூர்வமாக உதவுவர். பரிசில்களுக்கான நிதியைச் சிறுவர்களே பரிசில் அடையாள அட்டைகள் மூலம் சேமித்து வரலாம். அதற்கெல்லாம் தாய்ச்சங்கம் உதவியளிக்கவேண்டும்.

5. ஜி. ஸி. ஈ. பரீட்சையில் திறமையுடன் சித்திபெற்ற, எமது பிராமண வாலிப இயக்கத்தில் சேர்ந்த சிறுவர்கள் விரும்பினால் அவர்களின் மேற்படிப்புக்கு வேண்டிய வசதிகளைச் சங்கம் செய்து கொடுக்க அவர்கள் கற்றுத்தேறிச் சேவையில் அமர்ந்தபின் இலகுவான முறையில் அதனால் நேர்ந்த கடனைச்சங்கம் திருப்பிப்பெறலாம்.

6. எமது சமுதாயத்தில் பராயம் அடைந்தும் ஏற்ற வதூவரர்கள் பொருந்தப்பெறுதல் காத்திருக்கும் பெற்றோர்களுக்கு உதவியளிக்கும் முகமாக ஒரு விவாக ஒழுங்குச்சபை நிறுவிக்கொள்ளலாம். அச் சபையில் சேர்ந்த அங்கத்தவர்களின் வரலாறு முழுவதும் பதிவேட்டில் இடம்பெற்றிருக்கும், அதன்மூலம் குறித்தசபை அங்கத்தவர்களோடு தொடர்பு கொண்டு இலகுவான முறையில் திருமணங்களை நிறைவேற்றமுடியும்.

7. நான்காம் திட்டத்தின்படி திறமைசாலிகளான பிராமணச் சிறுவர்கள் பருவம் அடையும்போது தீட்சை முறையில் உயர்ச்சியளித்து ஆசாரியாபிஷேகம் செய்து அவர்களுக்குக் குருத்துவப்பட்டத்தைச் சங்கம் வழங்கவேண்டும்.

---

[மேலே குறிக்கப்பட்ட விஷயங்கள் 4-7-65 இல் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற திருவாகசபைக் கூட்டத்தில் கொள்கையளவில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றுள் முதலாவது திட்டத்தை முதலில் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு வசதியாக யாத்திரை செய்ய விரும்பும் அங்கத்தவர்கள் 30-7-65 க்கு முன் கௌரவ பொதுக் காரியதரிசியுடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஏனையவிஷயங்கள்பற்றி அங்கத்தவர்களது கருத்துக்களை மேலும் அறிந்து கொண்டால் காலக்கிரமத்தில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்தல் சாத்தியமாகும். ... ப — ர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கச் செய்திகள்

— பொதுக் காரியதரிசி—

**வேதாகம சாஸ்திர பாடசாலை ஆரம்பம்:—**

விசுவாவசு ௵ வைகாசி மீ 18-ந் திகதி (31-5-65) சனிக்கிழமை மாலை புங்குடுதீவு மேற்கு கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் உள்ள இல்லத்தில், தீவுப்பகுதிக் கிளைச் சங்கக் காரியதரிசி சிவஸ்ரீ. ப. கணேசராஜக் குருக்களின் முயற்சியினாலும் அக்கிளைச் சங்க அங்கத்தவர்களது ஒத்துழைப்பினாலும், பிராமணச் சிறுவர்களுக்கென வேதாகம சாஸ்திரப்பாடசாலை ஒன்று ஆரம்பமாகியது. ஊரைதீவு பிரமஸ்ரீ ம. இராமச்சந்திர ஐயர் அவர்கள் பாடசாலையின் ஆசிரியராகப் பணியாற்றிவருகிறார். ஆரம்பவிழாவில் பிரமஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா, பிரமஸ்ரீ ப வித்தியானந்த சர்மா சிவஸ்ரீ ச. முத்துக்குமாரசாமிக் குருக்கள் ஆகியோரும் திருவாளர் செல்லத்துரை ஆசிரியர் அவர்களும் உரை நிகழ்த்தினர்.

**உபந்நியாசங்கள்:—**

வேலணை - புளியங்கூடல் முத்துமாரி அம்பாள் கோவில் இலட்சார்ச்சனை வழிபாட்டில் குரோதி ௵ பங்குனி மாதம் 26-ந் உ இரவு பிரமஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா அவர்கள் "அன்னை வழிபாடு" என்னும் விஷயம்பற்றியும். சிவஸ்ரீ க. சாம்பசிவக் குருக்கள் அவர்கள் "காரைக்கால் அம்மையார்" என்னும் விஷயம்பற்றியும் உபந்நியாசங்கள் நிகழ்த்தினர். புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் கோவில் திருவிழாவின்போது சிவஸ்ரீ க. சாம்பசிவக் குருக்கள் அவர்களாலும் அவரது புதல்வி செல்வி ஜெகதாவினாலும் உபந்நியாசமும் சங்கீத கதாகாலட்சேபமும் நிகழ்த்தப்பட்டன. ஆனி மீ 17-ந் திகதி யாழ்ப்பாணம் கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற பிரதிஷ்டா மகாகும்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஷேகத்தில் ஷெ. குருக்கள் அவர்கள் 'கும்பாபிஷேகமும் கல்யாண மகிமையும்' என்பதுபற்றிப் பேசினார்கள்.

**சங்கத் தலைமைக் காரியாலயம்:—**

விசுவாவசு ஆடு வைகாசி மீ 1-ந் திகதி வெள்ளிக் கிழமை, சங்கத்தின் தலைமைக்காரியாலயம், யாழ்ப்பாணம் — வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதி 15-ம் இலக்க விலா சங்கொண்ட இடத்தில் தாபிக்கப்பட்டது. இவ்விடம் முன் னர் "கலா நிலையம்" எனப் பெயர்பெற்று இருந்தது. சில காலம் பாவனையின்றி ஓய்ந்திருந்தபின்னர், காலஞ்சென்ற முதலியார்திரு சு. திருச்சிற்றம்பலம் அவர்களால்தருமசாதனஞ் செய்யப்பட்ட இவ்விடத்தை அதன் இக்கால நிருவாகி ஆகிய அவரது மூத்த புதல்வன் திரு தி. பாலசுப்பிரமணியம் அவர்கள் மனம் உவந்து எமது சங்கம் பணியாற்றுவதற் கெனத் தந்துள்ளனர். திறப்புவிழாவன்று இம் மண்டபத் தில் 'காயத்திரீ தேவி'' படத்தை ஸ்தாபித்து பூஜை செய்து சங்கக்காரியாலயத்தை ஆரம்பித்து வைத்த உப - தலைவர் பிரமஸ்ரீ தி. கி. சீதாராமசாஸ்திரிகள் இந்த இடத்திற்கு 'காயத்திரீ பீடம்'' என்று பெயர் சூட்டினர். இப்பெயரே இனிமேல் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தைக் குறிக்கும் பெயராக விளங்கும்.

**குருபூஜைத் தினங்கள்:-**

சங்கத்தின் யாழ்ப்பாணப் பட்டினக் கிளையினல் ''காயத்திரீ பீட''த்தில் வைகாசி மீ 5-ந் திகதி திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசையும், ஆனி மீ 19-ந் திகதி மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும் ஒழுங்குசெய்யப்பெற்று நடைபெற்றன. திருஞானசம் பந்தர் தினத்தன்று பஜனை, வேதாத்தியயனம் ஆகிய வற்றுடன் பூசை நடைபெற்றது. அதன் பின்னர் பிரமஸ்ரீ க வை. ஆத்மநாத சர்மா அவர்கள் ''பிள்ளை யார் காட்டிய பிராமணர்கள்'' என்னும் விஷயம் பற்றி உபந்நியாசம் செய்தனர். அன்றைய பூஜைக்குரிய செல வுகளை, பிரமஸ்ரீ தி.ச. தியாகராஜ ஐயர் அவர்கள் செய் தனர். மணிவாசகர் தினத்தன்று மாலை 5-30 மணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''திருவடி பெற்ற சருக்கம்'' புராண படனம் நிகழ்ந்தது. பிரமஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா அவர்கள் புராணத்துக்குப் பொருள் கூறினர். அதனைத்தொடர்ந்து பஜனையும், வேதாத்தியயனமும் பிரமஸ்ரீ தி கி சீதாராமசாஸ்திரிகள் அவர்களது தலைமை உரையும், பிரமஸ்ரீ கி. பி. ஹரன் அவர்களது ''மாணிக்கவாசக சுவாமிகள்'' பற்றிய உபந்நியாசமும் நடைபெற்றன. அன்றைய பூசைச் செலவுகளை பிரமஸ்ரீ ப வித்தியானந்த சர்மா அவர்கள் செய்தார்கள்.

## வருடாந்த மஹாசபைக் கூட்டம்

ஆனிமீ 5-உ சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில், நல்லூர் சிவன்கோவில் வசந்த மண்டபத்தில் சங்கத்தின் வருடாந்த மஹாசபைக் கூட்டம் நடைபெற்றது.

விரோதி ஞு ஐப்பசி மாதம் 28 - உ (13 - 11 - 49) ஆரம்பிக்கப்பட்டு 14 ஆண்டுகள் நடைபெற்றுவந்த ''அகில இலங்கைச் சைவசமயக் குருமார்சபை'' யினதும் பிலவ வருஷம் பங்குனிமாதம் 18- உ (31—3 – 62) ஸ்தாபிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய ''பிராமண சமூகசேவா சங்க'' த்தினதும் வரலாறுகளையும், இவ்விரு சங்கங்களும் குரோதி ஞு ஐப்பசி மாதம 2- உ (18—10—64) இணைந்து " அகில பிராமணகுரு சமூகசேவா சங்கம்" உருவாகிய பின்னர் சங்கத்தின் வளர்ச்சி பற்றிய விபரங்களையும் கொண்டதான முதலாவது வருடாந்த அறிக்கையும், வரவுசெலவுக் கணக்கும் 20 பக்கங்கள் கொண்ட சிறு புத்தகமாக அச்சிட்டுக் கூட்டத்துக்கு வந்த அங்கத்தவர்களுக்கு வினியோகிக்கப் பட்டது. (ஏனைய அங்கத்தவர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படுகின்றது)

வருடாந்த மகாசபைக் கூட்டத்தில் பின்வரும் தெரிவுகள் (ஏற்கனவே சங்கக்காரியதரிசிக்கு எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட நியமனப் பத்திரங்களின்படி போட்டியின்மையால்) ஏகமனதாக நிறைவேறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்:- பிரமஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள்

உப தலைவர்கள்: ,, க. வை. ஆத்மநாத சர்மா
,, தி. ஷி. சீதாராம சாஸ்திரிகள்
,, பூ தியாகராஜ சர்மா
சிவஸ்ரீ ஐ கைலாசநாதக் குருக்கள்

கௌரவ பொதுக் காரியதரிசி: பிரமஸ்ரீ ப. வித்தியானந்த சர்மா
,, உதவிக் காரியதரிசி: ,, சோ. சிவசுப்பிரமணிய ஐயர்
,, வித்தியா காரியதரிசி: ,, ச. பஞ்சாட்சர சர்மா
,, பிரசுரக் காரியதரிசி: ,, சு. சிவசுப்பிரமணிய ஐயர்
,, பிரசாரக் காரியதரிசி: சிவஸ்ரீ, க. சாம்பசிவக் குருக்கள்
,, அபிவிருத்திக் காரியதரிசி: பிரமஸ்ரீ தி. ச. தியாகராஜ ஐயர்
,, தனாதிகாரி: ,, ச. வைத்தீசுவர சர்மா
,, உதவி ,, சிவஸ்ரீ கணேசக் குருக்கள்

நிருவாகசபை அங்கத்தவர்: 1, சிவஸ்ரீ கு. இராமநாதக் குருக்கள்
,, 2 ,, நா. யோகீசுவரக் குருக்கள்
,, 3. ,, ப. கணேசராஜக் குருக்கள்
,, 4. ,, இ. குகதாச ஐயர்
,, 5. ,, கா. கு சிவசுப்பிரமணியக்குருக்கள்
,, 6. ,, ச முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்
,, 7. ,, ஐ முத்துக்குமாரசாமி ஐயர்
,, 8. ,, தி. நடனசபாபதிசர்மா

சங்கத்தின் போஷகர்களாக ஆரம்ப காலத்திலேயே தெரிவு செய்யப்பட்டவர்கள்:

1. சிவஸ்ரீ ச கணபதீசுவரக் குருக்கள்
2. ,, இ. கு. பூரணானந்தேசுவரக் குருக்கள்
3. ,, ச. குமாரசுவாமிக் குருக்கள்
4. பிரமஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக் குருக்கள்

இவற்றில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் தெரிவுகள் கூட்டத்தில் நடைபெற்றன:
கௌரவ கணக்குப்பரிசோதகர்: பிரமஸ்ரீ சோ. மகேசுவர ஐயர்.

**மத்தியசபை அங்கத்தவர்கள்:**

யாழ்ப்பாணப் பட்டினக் கிளை:

1. பிரமஸ்ரீ ந மூர்த்தி ஐயர்
2. ,, இ. சி. கிருஷ்ணசுவாமி ஐயர்

காரைநகர்க் கிளை;

1. பிரமஸ்ரீ கா. ஸ்ரீநிவாச ஐயர்
2. ,, நா. ஞானசம்பந்த சர்மா

தீவுப்பகுதிக் கிளை, கொழும்புக் கிளை, பருத்தித்துறைக்கிளை, சாவகச்சேரிக்கிளை, ஆகியவற்றுக்குப்பிரதிநிதிகளையும் கிளைகள் இல்லாத இடங்களுக்குரிய அங்கத்தவர்களையும் காலக்கிரமத்தில், மத்திய சபையே கூடித் தெரிவுசெய்து கொள்ளலாமெனத் தீர்மானிக்கப்பட்டது.

சில தீர்மானங்கள் நேரமின்மையால் பின்போடப்பட்டன. இவற்றைப் பரிசீலனை செய்யவும், அங்கத்தவர்பலரின் விருப்பப்படி மேலும் பல விஷயங்களை ஆராய்வதற்காகவும், ஒரு விசேஷ மகாசபைக்கூட்டம் ஆவணி மாதப் பிற்பகுதியில் கூட்டப்படும்.

வருடாந்த மஹாசபைக் கூட்டத்தின் பின்னர் விசேஷ மஹாநாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவற்றின் விபரங்கள் தனியாக வேறிடத்தில் தரப்பட்டுள்ளன.

---

## அகில பிராமண குருசமூக சேவா சங்கம்
## நன்கொடை வரவுகள்

| | ரூ. ச. |
|---|---|
| **பிரமஸ்ரீ க. வை. ஆ. சர்மா மூலமாக:-** | |
| ,, வை. சோமாஸ்கந்தசர்மா, பூநகரி மகனது உபநயனம் | 5-00 |
| ,, இ சீதாபதி ஐயர், மானிப்பாய். தந்தையார் தகனக்கிரியை | 10-00 |
| திரு பொ. அம்பலவாணக்குருக்கள், விசேஷ நன்கொடை | 5-00 |
| **பிரமஸ்ரீ ப வித்தியானந்தசர்மா மூலமாக:-** | |
| பிரமஸ்ரீ க வைத்தீசுவரக்குருக்கள் காரைநகர். மகளது தகனக்கிரியை | 2-00 |
| ,, ,, ,, ,, தசாகம் | 5-00 |
| திரு. கு. சுப்பிரமணியம் காரைநகர். விசேஷ நன்கொடை | 2-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில பிராமண குருசமூக சேவாசங்க

## — அங்கத்தவர்களுக்கும் —

## 'ஞானதீப' சந்தா நேயர்களுக்கும்

அன்புடையீர்!

**பின்வருபவற்றைத் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.**

1. அன்பர்கள் தமது தபால் விலாசம் மாறப்பெற்றால். அதனைத்தயை கூர்ந்து எமது காரியாலயத்துக்கு உடனே தெரிவிக்குக.

2. ஞானதீபச் சஞ்சிகை கிடைக்கப்பெறாதவர்கள் அது வெளிவந்து 15 நாட்களுக்குள் தலைமைக் காரியாலயத்துடன் கடிதத் தொடர்பு கொள்ளவேண்டும்.

3 கட்டுரையாளர் தம் கருத்துக்களுக்குப் பத்திராசிரியராவது. பரிசீலனைக்குழுவினராவது எவ்வகையிலும் பொறுப்புடையவராகார்.

4. ஞானதீபத்தில் வெளிவரும் கட்டுரைகளைப்பற்றி, அன்பர்கள் தரும் சுருக்க விளக்கமான கருத்துக்கள் வரவேற்கப்படும். அவற்றுள் தகுதியானவை அடுத்து வரும் சுடரில் வெளியிடப்படலாம்.

5. வருகிற தை மாசம் முதலாக ஞானதீபத்தை மாசம் ஒரு சுடராக ஒளிரச் செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கைகூட்டவேண்டும். அதற்கு வாய்ப்பாக. ஒவ்வொரு அன்பரும் குறைந்தபட்சம் ஐவைந்து சந்தாதாரர்களைச் சேர்த்துத்தரின் எமது இலட்சியம் இனிது நிறைவேறும்.

6. அறிஞர்களான அன்பர்களிடமிருந்து கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அவை பொதுவாகச் சைவசமய அபிவிருத்திக்குரியனவாகவும், சிறப்பாகப் பிராமணசமூக முன்னேற்றங் கருதியனவாகவும் அமையவேண்டும். மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ. எச்சமூகத்தவரதும், எச்சமயத்தினரதும், எச்சாதியினரதும் மனத்தைப் புண்படுத்தும் கட்டுரைகள் ஏற்கப்படமாட்டா. கட்டுரைகள் கொண்டதலைப்புக்கு மாறுபடாமல், சுருக்கவிளக்கமாக, மூன்று பக்கங்களுக்குமேற்படாமல் தாளின் ஒருபுறம் மாத்திரம் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

'ஞானதீபம்' காரியாலயம்,
காயத்திரீ பீடம்,
15, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம், 17-1-65.

பத்திராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாவசு ௵ ..........

# ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களில்..........

## ..........விரத அநுட்டான விசேட வழிபாட்டுக்குரிய

# ..........தினங்கள் பற்றிய குறிப்பு.

**ஆடி மீ 1 உ** தட்சிணாயன புண்ணியகாலம் (16-7-65) வெள்ளிக்கிழமை கடக சங்கிராந்தி. அதிகாலை 6 நாழிகை 4 விநாடி. கடக சங்கிராந்திக்கு முன் 10 நாழிகை முதலாகவே புண்ணிய காலம் ஆரம்பிக்கிறது. இப்புண்ணிய காலத்தில் தூய நீராடி, தெய்வ வழிபாடு செய்வதும், பிதிரர்களுக்குத் தர்ப்பணம்செய்து வழிபடுவதும் முறையாகும். ஈழத்திரு நாட்டுத் தமிழ் மக்களிடையே ஆடி விருந்து கொண்டாடப்படுவது நெடுங்காலவழக்கம்.

**ஆடி மீ 13 உ** (28-7-65) புதன்கிழமை ஆடி அமாவாசை விரத தினம் வருடத்தில் வரும் ஏனைய அமாவாசைத் தினங்களிலும் பார்க்க ஆடி அமாவாசையும், தை அமாவாசையும் மேன்மையுடையன. தட்சிணாயனத்தில் முதலில் வரும் அமாவாசை ஆடி அமாவாசை, உத்தராயணத்தில் முதலில் வரும் அமாவாசை, தை அமாவாசை. இத் தினங்களில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடித் தெய்வ வழிபாடு செய்வதும், பிதிர்தர்பணம் செய்தலும் பெரும்பயனைத் தரும் தவிர்க்கமுடியாத காரணங்களால் தவறிப்போன பிதிர் வழிபாட்டுக்குரிய சிராத்தத்தை ஆடி அமாவாசையிற் செய்யலாம் என்பது விதி.

**ஆடி மீ 16 உ** (31-7-65) சனிக்கிழமை ஆடிப்பூரம், இது உலக அன்னையாகிய தேவிக்குரிய சிறந்த வழிபாடு செய்யத்தகும் விசேஷ விரதநாளாகும்.

**ஆடி மீ 20 உ** (4-8-65) புதன்கிழமை சைவ சமய குரவர் நால்வருள் ஒருவரும் தம்பிரான் தோழர் எனச் சிறப்புப் பெயர்பெற்றவரும், சிவனடியார்களுக்கெல்லாம் தம்மை அடிமையாக்கி அவர்களது திருப்பெயர்களை அமைத்துத் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பாசுரத்தைப் பாடியவருமாகிய சுந்தரமூர்த்தி நாயனாரது குருபூஜைத் தினமாகும். வேதபாராயணம், தேவாரபாராயணம், புராண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படனம், குருபூஜை, மகேசுரபூஜை என்பன செய்து விரதம் அனுட்டித்துப் பயன் அடைவதற்குரிய நாளாகும்.

ஆடி மீ 22 உ (6-8-65) வெள்ளிக்கிழமை வரலக்ஷுமி விரதம். சிராவண சுத்தம் பெற்றபின் வரும் சுக்கிலபட்சத்து இறுதிச் சுக்கிர வாரத்திலே இலக்குமிதேவியைக் குறித்து அனுட்டிக்கப் படுவதாகும். இது சிலபோது ஆவணிமாதத்திலும்வரும் இவ்விரதம் சிறப்பாக இல்வாழ் மகளிருக்கு உரியது. இதனை அனுட்டித்தவர் புத்திர பௌத்திர விருத்தியையும் சகல சம்பத்துக்களையும் அடைவர்.

ஆடி மீ 28 உ (12-8-65) வியாழக்கிழமை யஜுர்வேத உபாகருமம் இது யஜுர்வேதிகளான பிராமணர்கள் ஆண்டில் ஒரு முறை வேதவியாசபகவானைக் குறித்து வழிபாடு செய்து அனுட்டிக்க வேண்டிய சிறந்த விரதநாளாகும். இருக்குவேத உபாகர்மம் அன்றைய தினமே கொள்ள வேண்டுமென்று வாக்கிய பஞ்சாங்கத்திலும், ஆடி மீ 27. ந்திகதி (11-8 65) புதன்கிழமை கொள்ளவேண்டுமென்று திருக்கணித பஞ்சாங்கத்திலும் காணப்படுகிறது. அவரவர் அநுஷ்டானப்படி கொள்ளுக,

ஆடி மீ 29 உ (13-8-65) வெள்ளிக்கிழமை காயத்திரீ ஜபம், பிராமணர்கள் யாவரும் தினமும் செய்யவேண்டிய காயத்திரீ ஜபத்தை பூரணைக்கு மறுநாள் பிரதமைதோறும் விசேஷமாகச் செய்யவேண்டும், அப்படிச் செய்யத் தவறினாலும் சிராவண சுத்தபூரணையை அடுத்த பிரதமையில் காயத்திரீ ஜபத்தை அவசியம் விசேஷமாகச் செய்யவேண்டும் என்பதற்காகவே இங்கு குறிக்கப்பட்டிருக்கிறது. இதற்குரிய சங்கற்பத்தில்:-

ஸாம்வத்ஸரிக அப்ராயஶ்சித்த ப்ராயஶ்சித்தார்த்தம் ஸாம்வத்ஸரிக தோஷவஶ அவசநீய ப்ராயஶ்சித்தார்த்தம்

எனச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது வருடம் முழுவதும் மெய்ச்சமய நூல்களைவிட்டுப் பிறநூல்களைக் கற்றமையால் வரும் பாபநீக்கத்துக்காகவும், வருடம் முழுவதும் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களினால் நரக வீழ்ச்சிநேராதிருப்பதற்காகவும் என்பதாம். அதனால் இதன்பெருமை நன்கு புலப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி மீ 5 உ (20-8-65) வெள்ளிக்கிழமை ஸ்ரீஜயந்தி - கோகுலாஷ்டமி. தீயவரைத் தண்டித்தும் தூயவருக்கு அருள் புரிந்தும் காக்கும்வண்ணம் கண்ணபிரான் அவதரித்த தினமாகும். இத்தினத்தில் மாலைக்காலம் இல்லத்தைத் தூய்மையாக்கி வீட்டுவாயிலில் இருந்து பூஜை அறைவரையும் கண்ணன் திருவடிக்கோலமிட்டு இயன்ற நிவேதனப்பொருள்களுடன் கண்ணைப்பிரானைப் பூஜித்து வழிபாடு செய்தும் விரதம் அனுட்டிப்பது முறையாம்.

ஆவணிமீ 14 உ (29-8-65) ஞாயிற்றுக்கிழமை ஸாமவேத உபாகருமம். இது ஸாமவேதிகளான பிராமணர்கள் ஆண்டுக்கொரு முறை வேதவியாச பகவானைக்குறித்து வழிபாடு செய்யும் சிறந்த விரத தினமாம்.

ஆவணிமீ 15 உ (30-8-65) திங்கட்கிழமை விநாயக சதுர்த்தி விரதம். சிவ சுவரூபமான விநாயகப் பெருமானது திருவருளைப் பெற மிகவாய்ப்புடைய சிறந்த விரததினமாகும்.

ஆவணிமீ 25 உ (9-9-65) வியாழக்கிழமை நடராஜமூர்த்தி அபிஷேகதினம். அப்பெருமானைக் குறித்து வருடத்தில் செய்யும் ஆறு அபிஷேக தினங்களில் இது இரவுகால பூஜைஎனப்படும்.

ஆவணி மீ 27 உ (11-9-65) சனிக்கிழமை மஹாளயபக்ஷ ஆரம்ப தினம். அன்றுமுதல் 15 நாட்கள் மஹாளயச் சிராத்தம் செய்வதற்குரிய நாட்களாகும். பிதிரர்களைக் குறித்து; 15 நாட்களிலும் மஹாளயஞ் செய்யவேண்டும். இயலாதவர் இப்பதினைந்து நாட்களுள் ஒருநாளிலாவது தவறாது செய்தல் வேண்டும். அதற்கு சகிருத் மஹாளயம் என்று பெயர். அப்படி ஒருநாள் செய்யும்போது தமது முன்னோருக்குரிய திதி அமையும் நாளிற் செய்வதேமுறை. அல்லது, மகாபரணி, வியதிபாதம், அஷ்டமி இந்த மூன்றில் யாதுமொன்றிற் செய்யலாம்.

புரட்டாதிமீ 10உ (25-9-65) சனிக்கிழமை நவராத்திரி விரத ஆரம்பதினம். அன்று முதல் 9 நாட்கள் தேவி வழிபாட்டுக்குரிய நாட்களாம். முதல் 3நாள் துர்க்கா தேவியாகவும், நடுமூன்று நாள் மஹாலட்சுமியாகவும், கடைசி மூன்று நாள் சரஸ்வதியாகவும் சண்டிகாபரமேசுவரி அத்தேவியர் மூலமாக அருள் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதி௴ 19உ(4-10-65) திங்கட்கிழமை விஜயதசமி · வெற்றி பெற்ற 10-ஆம் நாள் என்ற கருத்தில், அன்று தெய்வவழிபாட்டுடன் தொடங்கும் எககருமமும் வெற்றியடையும் எனக் கொள்வர்.

புரட்டாதி௴ 24உ(9-10-65) சனிக்கிழமை நடாராஜமூர்த்தி அபிஷேகதினம். இது அப் பெருமானுக்குச் செய்யும் அர்த்தயாமப் பூஜை வழிபாடாகக் குறிக்கப்படும்.

---

**தவறு செய்வது தவிர்க்கவொண்ணாத தனிமை, அதனை உணர்ந்த பின் திருந்த முயல்வது அறிவுடைமை. ஆகவே, இவற்றை - இப்படித் திருத்திக் கொள்க.**

பக்கம் — வரி

51 — 10 தேக அந்தத்தில் — உடனேயே

51 — 10 பெறுவர்(என்பதன்பின் இவ்வரியை எழுதுக) } அசத்யோ நிர்வாண தீட்சை பெற்றோர் தேக அந்தத்தில் முத்திபெறுவர்.

51 — 12 சாதாரண — சாதார

51 — 15 சாதாரண — சாதார

51 — 17 சாதாரண — சாதார

---

# அறிவுச் சுடர்மணிகள்

(சைவசமய நெறியிலிருந்து திரட்டியவை)

1. ஆகமம் - இது மூன்றெழுத்துச் சொல். ஆ--ஞானம், க--மோட்சம், மம்-மலநாசம். ஆகவே, ஆன்மாக்களது மலத்தை அழிவு படுத்தி, அறிவைத் தோற்றுவித்து, முத்தியை (நிலையான இன்பத்தை)க் கொடுப்பது ஆகமம் எனப் பெயர் பெறுவதாயிற்று.

※ ※ ※ ※ ※

2. வேதாந்தம் = வேத — அந்தம்; அறிவுச்சிகரம், உபநிடதம், பிரபல சுருதி என்பன ஒரே பொருளுடையன. வியாசமகாமுனிவர் சூத்திர ரூபமாக இயற்றியருளிய பிரமமீமாஞ்சை வேதாந்தம் எனப்படும். பிரமமீமாஞ்சைக்குரிய உரைகள் பலவற்றுள்ளும் உண்மைப் பொருளை உணர்த்துவது நீலகண்ட பாடியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயவினா?

பின்வரும் அன்பர் தமக்குள்ள ஐயத்தைப் போக்குவதற்காக வினா அனுப்பியிருக்கின்றார். அதனை வெளியிட்டிருக்கிறோம். அறிஞர்கள் அதற்குத்தகுந்த விடையை எழுதியனுப்பினால் அடுத்த சுடரில் பிரசுரிக்கப்படும்.

— பத்திராசிரியர்

## ஐயவினா. 3.

[சோ, வரதராசசர்மா — கொழும்புத்துறை]

வருஷந்தோறும் ஓர் ஆலயத்தில் கொடியேற்றித் திருவிழா நடைபெற்றுவருகிறது. இடைக்காலத்தில் யாகம், வசந்தமண்டபம் திருப்பணிவேலைகள் நடைபெறுவதால், கொடியேற்றித் திருவிழா நடைபெறவில்லை. ஷெ திருப்பணிவேலைகள் நடைபெறும் காலத்தில் (ஆகம முறைப்படி) அலங்காரத் திருவிழாச் செய்யலாமா? செய்யக்கூடாதா?

## ஐயவினாக்களுக்கு விடை.

(1) திரு இ. சிதம்பரப்பிள்ளை - ஆசிரியர் — நீர்வேலி,

**வினாவியவை.**

1. சூரியனும், சந்திரனும் கிராந்தி மண்டலத்தில் ஒன்றுபட்டுச் சந்திரகலை முழுவதும் மறைய நேருந்தினமே அமாவாசையாம். சந்திர மண்டலமானது சூரியனிடத்திருந்து கவர்ந்த ஒளி முழுவதையும் பூரணமாகப் பிரதிவிம்பிக்குந்தினமே பூரணையாம். சூரியன் சிவாம்சமும் சந்திரன் சக்தியம்சமுமாகும். சூரியன் சிவாம்சம் என்னும்போது சக்தியைத் தன்னுள்ளடக்கியதென்பது உண்மையாம். எனவேதான் அமாவாசை விரதம் சிவாம்சமாகிய தந்தைக்குரிய விரதநாளாயிற்று. தாயில்லாதவர்கள் தந்தையைக் குறித்து அமாவாசை விரதநாளில் தருப்பணஞ்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும்போது தாய்க்கும்சேர்த்தே தருப்பணஞ் செய்யவேண்டும். பூரணை நாளில் தாய்க்குவேருகத் தருப்பணஞ் செய்யும்படி விதியில்லை. ஆகவே அமாவாசை விரதம் பிதிரர்விரதமாயிற்று. பூரணை விரதம் உலக அன்னையாகிய பராசக்திக்குரிய விரதமாகும். பெற்றதாயை இழந்தவர்கள் பராசக்திவடிவான பெற்றதாயைக்குறித்தும் விரதம் அனுட்டிக்கவேண்டும். "பூரணையில் மாதாவைக்குறித்து விரதம் அனுட்டிக்க" எனச் சிராத்த தீபிகையிற் கூறப்பட்டிருக்கிறது.

2. "தாந்தாமுன்செய்த வினைதாமே அநுபவிப்பார்" எனவும்; 'உள்ள தொழிய ஒருவர்க்கொருவர் சுகங்கொள்ளக் கிடையா'" எனவும் எழுந்த நீதிவாக்கியங்கள் உண்மையையே கூறுகின்றன.

ஒருவர் தாம்செய்த நல்வினைகாரணமாகவே தமக்கெனச் சற்புத்திரரைப்பெற்றுக் கொள்கின்றனர். பிதாவுக்குப் பிள்ளையும் பெற்றதாய்க்குப் பிள்ளையும் ஒருபோதும் பெற்ருேருக்கு வேருனவர் அல்லர். அதனுல் பிள்ளை செய்யும்செயல் பெற்ருேர்தம் வினைப்பயனுக உள்ளதே. "ஒருவர்க்கொருவர்" என்றது தொடர்பில்லாத அன்னியரைக் கருதுமேயன்றிச் சந்தானமான (தொடர்பான) பெற்ருேர் பிள்ளைகளைக் குறிக்காது.

"ஆத்மாவை புத்ர நாமாஸி — ஆன்மாவாகிய நீயே புத்திரன் என்னும் பெயருடையவன் ஆகிருய்" —வேதவாக்கு.

> "தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்
> தந்தம் வினையான் வரும்" —என்பதும்
>
> "எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
> பண்புடை மக்கட் பெறின்" —என்பதும் திருக்குறள்.

பெற்ருேர் நெறிமுறைதவருது பிள்ளைகளைப்பெற்று வளர்த்தமையானன்றே அப்பிள்ளைகள் பிதிர்காரியங்களைச் செய்கின்றனர். எனவே, பிதிர்காரியப்பயன் பெற்ருேர் தாம்செய்தவினையின் பயனுகி, அவருக்குள்ளதே ஆதல் தெளிவாகிறது.

3. "சந்நிதி விரோதம்" என்பது தீவினை காரணமாக ஒருவர் அநுபவிக்குந்துன்பங்கண்டு அது காரணமாக அவரோ பிறரோ இறைவனை நிந்தித்தல் தூஷித்தல் என்பனவாம். ஆன்மாக்களுக்குரிய வினைகள் பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமியம் என மூவகைப்படும். முன்னே தொடங்கிச்செய்து அநுபவித்து முடிவுபெருதவினை பிராரப்தம் - முன்னைய பிறவிகள்தோறும் அநுபவித்து எஞ்சிய கன்மசேடம் சஞ்சிதம் (பழவினைக்கட்டு) ஆகாமியம் - இப்போது செய்யும்வினை (வருவினை). பிராரப்தத்திஞலோ, சஞ்சிதத்திஞலோ ஒருவன் துன்பம் அநுபவிக்கும்போது அவனது துன்பங்கண்டு அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது இரங்கி உதவிசெய்தலே மாந்தர்கடன். அதுவே ஆகாமிய வினையாகும். இந்த வருவினையும் சிவார்ப்பணமாகச் செய்யப்படுவதாயின், ஒரு போதுஞ் சந்நிதி விரோதமாகாது, பெரிதுஞ் சால்புடையதேயாகும். மேலும் அது பயன் கருதாது செய்தஉதவி, காலத்தினாற் செய்தஉதவி, செய்யாமற்செய்த உதவி என்றெல்லாம் வகைப்படுத்தியும் போற்றப்படும். எனவே, காலம் அறிந்து, இடம் அறிந்து, பயன் கருதாது நாம் பிறர்க்குச் செய்யும் தானதருமங்கள் ஒருபோதும் தண்டனைக்குரியவையாகமாட்டா.

4. ''மைப்புறு கண்ணியர் மானுடத்தியல்பின் வணங்குவது'' என்ற சொற்றொடருக்குப் பொருள் கொள்வதற்கு - அதற்கு முன்னுள்ள ''அவர் பலரும்'' என்பதைச் சேர்த்துக்கொள்க. அதன் பொருளாவது:- அடியார்களாகிய ஆடவரும் மகளிரும் ஒருங்கு திரண்டு இறைவனை வணங்குவது. இறைவனை நாயகனாகப்பாவித்து, ஆன்மாக்கள் யாவரும் நாயகி பாவத்தில்நின்று வணங்குதலாம்.

ஆன்மாவானது இன்பப் பொருளாகிய சிவத்தை நோக்கும்போது அசத்தாகவும், சடப்பொருளாகிய பாசத்தை நோக்கும்போது சத்தாகவும் இருப்பதனால், ஆன்மா சதசத்து எனப்படும். இறைவன் இன்பத்தை அருளுவதனால் போகி, ஆன்மா அசத்தாகிப் போகம் நுகர்வதனால் போக்கியப்பொருள், அந்த நிலையில்ஆன்மாக்களுக்குள் யாதொருபேதமும் இல்லை. ஆன்மாவானது சரீரமாகிய இந்தச்சடத்தோடு சேர்ந்து சத்தாகும்போது தான் பேதங்கற்பிக்கப்படுகிறது. அப்போதுதான் ஆன்மாவானது ஆண், பெண் என்றும்; கணவன், மனைவி என்றும்; தந்தை, தனயன் என்றும்; தாய், பிள்ளை என்றும், பேதவுணர்ச்சிபெற்று உறவுமுறை கொள்கிறது. பேரின்பம் எய்தும்நிலையிற் பேதமே இல்லையாம்.

(2) பிரமஸ்ரீ ஐ. ப சர்மா - குருக்கள் - திரௌபதை அம்மன்கோவில் உடப்பு, வினவியவை,

1. சூத்திரருக்குப் பிறப்பு இறப்புத்தீட்டுக்கள் முப்பதுநாட்களே என்பது விதி. அதனை எக்காரணம்கொண்டும் கூட்டவோ குறைக்கவோ எவருக்கும் அதிகாரம் இருப்பதாகச் சொல்லப்படவில்லை.

''அம்மா! எனஅலற ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மானுட ரெல்லாம் இன்புற் றிருக்கின்றார்
அம்மாவெனுஞ்சொல் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்மா மிசையம்என்றூற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.
—சிவதருமோத்தரம்

அறியாமை காரணமாக மாமிசம் புசிப்போர் அது தவறு என்று உணர்ந்தபின்பு ஆவது அதனைச்செய்யாது விடுவர். சிவதீட்சை பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரே சைவசமயப் பிரவேசம் செய்தவராவர். அவ்வாறு சைவசமயப்பிர வேசம் செய்தபின்னும் மாமிசம் புசிப்பவர் குளிக்கப்போய்ச் சேறுபூசி யவரே அவரது செயல்குறித்து இரங்குவதேயன்றிச் சொல்லவோ செய் ய்யவோ வேறுஒன்றும் இல்லை.

பிறவிச்சைவனுகவுள்ள சூத்திரர் சமயதிட்சையளவோடு நின்றுவிடாது விசேட திட்சை, நிருவாணதீட்சை என்றபடிகளினுல் தம்மை உயர்த்திப் பேணிப்பாதுகாத்து வருவாராயின் அவர்கள் சற் சூத்திரர் எனப்படுவர். அவர்களுக்குரிய 30 நாள் தீட்டு முறையே 21 நாள் தீட்டு என்றும், 16 நாள் தீட்டு என்றும் குறைய இடமுண்டு.

2. ஸ்வஹூவார தி ஐதி ஸ்வஹூவாரி - வேதத்தை ஓதுவதற்கு அதி காரம்பெற்று இறைவனை அடையும் மார்க்கத்தை அநுசரிப்பவனே பிரம சாரி எனப்படுவான். அவன் ஆசாரியன் ஆவதற்குத் தகுதியுடையவன்.

பிரமசரி கிருகி யென்னவே பேசும்
இருவருமே தேசிகரென் றெண். —சைவசமயநெறி.

பௌதிகப் பிரமசாரி, நைட்டிகப் பிரமசாரி என இருவகைப்படுவர் பிரமசாரிகள். உபநயனமுதல் விவாகம்வரை விரதம்காப்பவன் பௌதி கப் பிரமசாரி - மரணந்தம்வரை பிரமசரியங்காத்துத் துறவியாயிருப்பவனே நைட்டிகப் பிரமசாரி - பிரமசாரியான ஆசாரியன் முத்தி கொடுக்குஞ் செயல் செய்விக்கத்தக்கவன். கிருகத்தனுன ஆசாரியனே போகம், மோட் சம் என்பனவற்றுக்குரிய இரு செயல்களும் செய்விக்கத்தக்கவன். இதனை உணர்ந்தால் குறித்த வினவுக்கு விடை காணலாம்.

**வினக்களை அனுப்புவோர் அடியிற்காணும் விலாசக் கூப்பனை வெட்டிக் கடித உறையிலாவது, அஞ்சலட்டை யிலாவது ஒட்டி அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப் பெருத வினக்கள் 'ஞானதீபத்தில்' இடம்பெறமாட்டா.**

ஐயவினு:

**ஆசிரியர்**
''ஞானதிபம்''
15, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறைப்பொருளை அறியுந்தகைமை உடையவர்

[பிரமஸ்ரீ த. இ. சுப்பிரமணியக் குருக்கள்]

மந்திரங்களுக்கு மூலாதாரமாக உள்ளவை வேத சிவாகமங்கள். அவை இறைவனாலும், அவனருள்வழி வந்த சிஷ்ய பரம்பரையினரான முனிவர்களாலும் அருளப்பெற்றன. மேலும், அவை சைவசமயக் கட்டுப்பாடுகளின் சிகரமாக விளங்குவன.

அவ்வழிவந்த வேதமந்திரங்களையாவது, அவற்றின் பொருள்களையாவது குருசிஷ்ய முறையினன்றிச் சொல்லக் கூடாது.

" வைதிக மறையைப் பின்னவர்க் குரைத்தல்
தீதெனப் புகன்றனர் புலவோர் — காசிகாண்டம்

அதனால், வைதிகமறையைப் பரிபக்குவம் இல்லாதவர்களுக்கு ஒருபோதும் சொல்லக்கூடாது. அப்படியன்றிச் சொன்னால் நன்மை விளைவதற்குப் பிரதியாகத்தீமையே விளையும் என அறிஞர் கூறியுள்ளனர். தகுதி இல்லாதவர்கள் வேதப்பொருளை அறிய முற்பட்டால் அவர்கள் மாதிரயத்தை அடைவர் எனக் கூர்மபுராணம் கூறுகின்றது.

வேதமந்திரங்களையோ அவற்றின் பொருள்களையோ தகுதியுடையவர் மாத்திரம் குருசீட முறையில் அறியலாம். தகுதியற்றவராய், பௌத்தசமய வாதஞ்செய்ய வந்த புத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவை மணிவாசகப் பெருமானார் விளித்து, வேதப் பொருள்களைச் சொல்லல் ஆகாது என்ற கருத்துப்பட

"முன், நற்றவமிலாதாய் உன்தன் எதிர் சொல்வது அல
என்று இது உரை செய்வார்" — திருவாதவூரர்புராணம்.

எனச்சொல்லப்பட்டிருக்கிறது. மதுபானஞ் செய்பவர், மாமிசம் புசிப்பவர் இவர் முதலாயினோர்க்கு வேதமந்திரங்களில் வரும் கருப்பொருள்களை ஒருபோதும் சொல்லக்கூடாது என வரையறுக்கப்பட்டிருக்கிறது.

அதனால் அவர்கள் மனமுடைந்து,

"கண்ணைத்துயின்று அவமே காலத்தைப்போக்காதே
விண்ணுக்கு ஒருமருந்தை வேதவிழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக்கசிந்துருகி ..........."

என மணிவாசகப்பெருமான் கூறியருளிய அருமைத் திருவாக்கிற்கிணங்க, வேறுபாடின்றி யாவரும் கடைத்தேறும்பொருட்டு இறைஅருள் வயம்பெற்ற பதினெண் புராணங்களையும், தேவார திருவாசகங்களையும் படித்தும், ஓதியும் வீடுபேறும் பெரும் பயன் அடைய முயற்சிப்பார்களாக.


## அகில பிராமண
## குருசமூக சேவாசங்க வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | விக்னேஸ்வர பூஜாவிதி | ரூபா 2—00 |
| 2. | அக்கினி காரியம் | ,, 2—50 |
| 3. | விநாயக மகோற்சவ விளக்கம் (தமிழ் விளக்கம்) | ,, 3—00 |

பிரபல புத்தகசாலைகள் எங்கும் கிடைக்கும்

தொகையாகப் பெறவிரும்புவோர் சங்ககாரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

"காயத்திரீபீடம்" — 15, பிரப்பங்குளம் வீதி — யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குரு சீட | நவராத்திரி தத்துவம் | சம்பாஷணை |
|---|---|---|

— வியாகரண சிரோமணி: தி. கி. சீதாராமசாஸ்திரிகள் —

# 3

**சீடன்:** வணக்கம். குருவே வணக்கம். புரட்டாசி மாதத்தில் நவராத்திரிவழிபாடு நடைபெறுகின்றது. அதன் கருத்துயாது? சைவர்களாகிய எமக்கும் அன்னை வழிபாட்டிற்கும் உரிய தொடர்புயாது? அந்த வழிபாட்டைப்பலர் பலவிதமாக அனுட்டிக்கின்றனர். அவைகளின் தன்மை என்ன? அவைகளால் நாம் அடையும் பலன் யாது? அவற்றை விளக்கும் வண்ணம் தங்களைப் பணிவாக வேண்டுகின்றேன்.

**குரு:** நல்லது, மகனே நல்லது. நவராத்திரியின் தத்துவம் பற்றிக் கூறுவோம், அவதானமாகக் கேட்பாயாக. புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்த நாள் தொடங்கி ஒன்பது நாள்கள் இரவில் கொண்டாடப்படும் தேவி வழிபாட்டை நவராத்திரி என்று கூறுவர். பத்தாவது நாள் விஜயதசமி ஆகும்.

உலகம் முழுவதிலும் ஆண் பெண் வடிவமாக விளங்கும் ஜீவராசிகள் யாவும் சிவசக்தி ஸ்வரூபம் என்று ஞானிகள் கருதுவார்கள். சிவசக்தி ஐக்கிய ஸ்வரூபமே ஐந்தொழிலைப் புரிந்து வருகின்றது.

அருவமான அந்த சிவசக்தி ஸ்வரூபம் வருடம் முதலிய காலத்தை இயக்கிக் கொண்டும், இளவேனில் முதலிய கால மாற்றத்தைச் செய்து கொண்டும், காலத்தைப் பிரித்து அளந்து காட்டும் கருவிகளாகிய ஞாயிறு மதிகளின் நடுவில் அதிட்டித்து நின்று கொண்டு அருள் புரிந்து வருகின்றது. பரிதியும் மதியும் கும்பத்தில் சேருங் காலத்தில் சிவஸ்வரூப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடும். கன்னியில் சேர்ந்து பின் பிரிந்து இயங்கும் பொழுது சக்திஸ்வரூப வழிபாடும் நடைபெறலாயிற்று.

சூரியனுடைய கதியைக் குறிக்கும் காலம் பகல் என்றும் மதியின் கதியைக் குறிக்கும் காலம் இரவு என்றும் மக்கள் பிரித்து வழங்கலாயினர். சூரிய மண்டலத்தில் இறைவனும் சந்திர மண்டலத்தில் இறைவியும் நின்று அருள் புரிகின்றனர். ஆகவே சிவ வழிபாட்டிற்குப் பகலும் தேவிவழிபாட்டிற்கு இரவுமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சூரிய மண்டலத்தில் சிவபெருமான் அதிட்டித்து நின்று அருளுகின்றார் என்பதை வேதாகமங்கள் தெளிவாகக் கூறுகின்றன. சூரியமண்டல மத்தியில் சிவப்பு நிறமாகவும் வெண்மை கலந்த சிவப்பு நிறமாகவும் பொன்னிறமாகவும் மங்கள ரூபமாகவும், சிவபெருமான் விளங்குகின்றார். அவருக்கு வணக்கம் என்று வேதம் கூறுகின்றது.

அஸௌ யஸ்தாம்ரோ அருண உத பப்ரு: ஸுமங்கல:|
நமஸ்தாம்ராய சாருணாய ச||

என்பது வேத மந்திரமாகும்.

ஆன்மார்த்த சிவபூசை செய்பவர்கள் முதலில் சூரியனில் அதிட்டித்து நின்று அருள் செய்யும் சிவனுக்குரிய பூசையை முடித்த பின்பு தான் சிவபூசை செய்வார்கள். அப்பொழுது இறைவனைப் பின்வருமாறு பிரார்த்தனை செய்வார்கள்.

[illegible]

[illegible] ஸாம்பம் ஸம்ஸார பேஷஜம்|
நீலக்ரீவம் விரூபாக்ஷம் நமாமி ஶிவமவ்யயம்||

சூரியனில் மறைந்து நின்று அருளும் சிவபெருமான் எங்களைக் காக்கட்டும், சூரிய மண்டல மத்தியில் வீற்றிருப்பவரும் உமையம்மையோடு கூடியவரும் பிறவிப் பிணியை நீக்கவந்த மூலிகை போன்றவரும் கரிய கழுத்துடையவரும் முக்கண்ணரும் என்றும் விகாரமற்றவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய சிவபெருமானை வணங்குகின்றேன் என்பது இதன் விளக்கமாகும்.

இதனுல் பகல் சிவனைக் குறிக்கின்றது என்பது தெளிவாகின்றது. இறைவனது திருவருளே சக்தியென்பர். அந்தச் சக்தி சந்திர மண்டலத்தில் நின்று அருள் புரிகின்ருள். சூரியனிடமிருந்து வெப்பமான ஒளியைப் பெற்று உலகுக்குத் தண்மையமான ஒளியைச் சந்திரன் பரப்புகின்ருன். என்பதை விஞ்ஞானிகளும் எடுத்து விளக்கியுள்ளனர். லலிதா ஸஹஸ்ரநாமத்தில்:-

நித்யா ஷோடஶிகா ரூபா

என்று கூறியிருக்கின்றது. பதினறு கலைகள் நிறைந்த பூரணை மதியில் பதினறு கலையுடன் பொலிவுற்று விளங்குகின்ருள் என்று கருத்தாகும். மேலும் லலிதா சஹஸ்ர நாமத்தில்:-

சந்த்ரமண்டல மத்யகாயை நம:

என்று ஒரு அர்ச்சனை கூறப்பட்டிருக்கின்றது. சந்திர மண்டல மத்தியில் நின்று அருள் புரிகின்ற அன்னைக்கு வணக்கம் என்று கருத்தாகும்.

இவ்வாறு கண்கண்ட தெய்வமாகக் கருதப்படும். சூரியசந்திரர்களிடத்தில் சிவசக்திவழிபாடு நடைபெற்று வருவதாயிற்று சிவவழிபாடு பகலிலும், சக்திவழிபாடு இரவிலும செய்யவேண்டும் என்று தெட்டத்தெளிவாககின்றது.

ஒரு பகலும் ஒரு இரவும் கொண்டது ஒருநாளாகும். தேவர்களுக்கு ஒரு வருடம் ஒருநாளாகும். பகல் உத்தராயணம், இரவு தட்சிணயனம். ஆனிமாதம் அமாவாசைக்கு மறுநாளிலிருந்து ஆஷாடசுத்தம் உண்டாகின்றது. அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே புரட்டாசி அமாவாசைக்கு மறுநாளிலிருந்து ஆசுவிஜசுத்தம் தொடங்குகின்றது. இந்தக்காலம் தேவர் களுக்குரிய இரவின் நடுப்பகுதியாகும். சக்திக்கு பூரண வலிமையுடைய நேரமாகும் அந்தநேரம் சக்தியைவழி பட்டு அவள் அருளைப்பெறநாம் முயற்சிக்கின்றோம். எங் ஙனம் சிவஸ்வரூபம் பிரபஞ்ச காரியத்தை முக்குணவடி வமாகிகின்று அயன் திருமால் உருத்திரன் என்று பெயர் தாங்கி நடாத்திவருகின்றதோ அதுபோல சக்தியும் பிர பஞ்சகாரியத்தை முக்குணவடிவமாகநின்று துர்க்கை லட்சுமி சரசுவதி என்று பெயர்தாங்கி நடாத்திவருகின் றது. முறையே தமோகுணம் துர்க்கை என்றும் ரஜோ குணம் லட்சுமி என்றும் சத்துவகுணம் கலைமகள் என்றும் பிரிக்கப்படுகின்றது. மூன்று குணங்களின் சமஷ்டிரூபம் லலிதாபரமேசுவரி என்று கருதப்படுகின்றது ஆன்மா வினைக்கேற்றபடி தனுகரணபுவன போகங்களைப் பெறு கின்றது. என்று சாஸ்திரம் கூறுகின்றது. நல்லஉடலை யும் உடல்வலிமையையும் ஆன்மாதுர்க்கையின் அருளால் பெறுகின்றது. அந்த உடல்பஞ்ச பூதங்களால் ஆகியதால் சிறிது காலம் வளர்ச்சி பெற்று சிறிதுகாலம் சமநிலைபெற் றபின் முடிவில் படிப்படியாக வலிமையை இழக்கின்றது. ஆகவேதான், அதனை தமோகுணத்திற்குரியதாக் கொள் ளப்பட்டது. நல்லசெல்வத்தையும் போகத்தையும் அளிப் பவள் இலக்குமி ஆவாள். செல்வத்தைப் பெற்றுஅதற்குத் தக்க சூழ்நிலையை அமைத்துக் கொண்டு அறிவைப்பெற முயலுவதற்கு உதவியாக அமைவதால் இதனைரஜோ குணத்திற்குரியதாகக் கொள்ளப்பட்டது. அந்த அறிவை கலைமகள் அருளால் பெற்று அந்த அறிவு ஆன்மவிசார ணைக்குப் பயனுக அமைவதால் சத்துவகுணத்திற் குரிய தாகக் கொள்ளப்பட்டது. இம் மூன்றும் ஒருங்கே அமைந்த சொரூபநிலை லலிதாபரமேசுவரியாகும். உடல் புலன்கள் மனஸ் போகப்பொருள்யாவும் மாறுபடும் தன்மையுடையன. என்றும் மாறுபடாத மெய்ப்பொருள் யாது? ஆன்மாவிற்கும் மெய்ப்பொருளுக்கும் என்ன தொடர்பு. இவைகளை அறியச்செய்வது அறிவு. அந்த அறிவினூடாகவே அறியப்படவேண்டிய பொருளிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்துவைப்பது அவள் திருவருள். அத்திருவருளை சக்தி என்பர். அப்பராசக்தியினது துணைகொண்டு பரமபதத்தை நாம் அடையமுடியும். அந்தப் பராசக்தியின் வழிபாடே இந்த நவராத்திரி வழிபாடாகும்.

சீடன்: ஐயா, மிகான்று நவராத்திரி வழிபாட்டு முறையை யும் கூறியருளவேண்டும்.

குரு: ஆம். உலகமாதாவை வழிபட்டுச் சீவான்மக்கள் சிவன் திருவடியை அடையவேண்டும் என்ற கருத்துக்கொண்டு இந்நவராத்திரி வழிபாடு தொன்றுதொட்டு வழமையாக வர லாயிற்று. சைவர்கள் யாவரும் மற்றவரும் அனுட்டிக்க வேண்டிய சிறந்த வழிபாடாக உலகத்தில் பரவியுள்ளது.

இந்த நவராத்திரி வழிபாட்டைப் பலர் பலவிதமாகக் கொண்டாடிவருகின்றனர். அவையாவும் அன்னையின் அரு ளைப் பெறுவதற்கு உரியவைகளேயாகும்.

## 1. கும்பவழிபாடு

ஆலயங்களில் கும்பம்வைத்து அதில் பூசித்து வழிபடு வார்கள். கும்பத்தைச்சுற்றி மணல் பரப்பி நவதானியத்தை விதைத்திடுவார்கள். அவை ஒன்பது நாட்களில் நன்றாக வளர்ச்சியுறும். கும்பத்தில் சந்திரபிம்பத்தில் அருவமாக நின்று அன்னை அருள்புரிகின்றாள் என்பதே கருத்தாகும் ஓஷதீசன் என்று சந்திரனுக்கு ஒரு பெயர் உண்டு. எல் லாத் தானியங்களுக்கும் சந்திரன் தலைவனாவான். சந்திர னுடைய அமுத கிரணத்தால் தானியங்கள் செழிப்பாக வளருகின்றன - சகல உயிர்களுக்கும் சீவாதாரமான உண வுப்பொருளை அன்னை சந்திரமண்டலத்திலிருந்து அமுதகிர ணங்களைப் பொழிவித்து, செழிப்புறச் செய்து நல்வாழ்வு அளிக்கின்றாள் என்பதே அதன் கருத்தாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தீப வழிபாடு

குத்துவிளக்கை மலர்மாலைகளால் அலங்கரித்து தேவியை அதில் ஆவாகித்து, பூசித்து, துதித்துச் சிலர் வழிபடுவார்கள். அறியாமை என்னும் இருள் நீங்கி ஒளிபெருக்கி அருளவேண்டுமென்பதே இவ்வழிபாட்டின் நோக்கமாகும்.

## 3. நாத உபாசனை

சிலர் நாதவழிபாடு செய்து அன்னையின் அருளைப்பெற முயலுவார்கள். கானப்பிரியன் பரமேசுவரன் என்பதை வேதம் வெளிப்படையாகக் கூறுகின்றது. இராவணன் சாமகானத்தால் இறைவனை மகிழ்வித்தான் என்று புராண வாயிலாக நாம் அறிகின்றோம். அதேமுறையாக அன்னையும் சாமகானவடிவமாக நின்று இறைவனை வழிபடுகின்றாள் என்றும் கூறப்பட்டுள்ளது.

[illegible]

மகாநவமியன்று சாமகானரூகமாகக் காட்சியளிப்பவள் என்பதே கருத்தாகும். ஆகவே அடியார்களும் கானத்தினால் இறைவியை வழிபடத் தொடங்கினார்கள் இதுவே நாதோபாசனை என்பர். நாதம் இரண்டு விதமாகும். ஒன்று வெளிப்படையான எழுத்து ஒலி கொண்டதாகும். அதுவே வாய்ப்பாட்டு. மற்றது எழுத்துக்கள் தெளிவு இல்லாமல் ஒலி மட்டிலும் கொண்டது. இது நரம்பு வாத்தியமாகும் இவ்விரண்டும் சேர்ந்து சுருதி லயத்துடன் அமைவது கீதமாகும். அதனை நிபத்த கீதம், அநிபத்த கீதம் என்று இரண்டாகப் பிரிப்பார்கள்.

பக்தி, ராகம், பாவம், தாளம், கதி இவைகளுடைய கட்டுப்பாட்டுக்குள் அடங்கியது நிபத்த கீதமாகும். பக்தியை மட்டிலும் முக்கியமாகக்கொண்டது அநிபத்த கீதமாகும். குருவினிடம் முறையாகக் கற்றுணர்ந்தவர்கள் அலங்கார மண்டபம் அமைத்து அதனில் தேவியின் திருவுருவத்தை வைத்து ஒன்பது நாட்களும் கான அமுதம் பொழிந்து நாத உபாசனை செய்வார்கள். பொதுமக்களும்கூடி அதிலீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு இன்பரசம் அனுபவிப்பர். படிப்பவர், கேட்பவர் இருவரும் கீதோபாசனையால் வரும்பயனை அடைவார்கள். இதனுல் வாழ்க்கையில் துன்பம் நீங்கி தேவியின் அருளைப்பெற்று இன்பவாழ்வை அனுபவிப்பர் என்பதே கருத்தாகும்.

### 4 கொலு வணக்கம்

இல்லங்களில் பலவகைக் கொலுப் பொம்மைகள் வைத்து மாலையில் விளக்கேற்றி அண்மையில் வசிக்கும் திருமணஞ்செய்த பெண்களை அழைத்து கொலுவுக்குமுன் மரியாதையுடன் உட்காரவைத்து அவர்களைக்கொண்டு பக்திப்பாடல்களைப் பாடுவித்து முடிவில் விசேஷ பூசைகள் செய்வார்கள். இவ்வாறு ஒன்பது நாட்களும் தேவி வழிபாட்டைச் செய்வார்கள் இதன் கருத்து; இக்கொலுவில் வைக்கப்பட்டுள்ள பொருட்கள் யாவும் கண்ணையும், உள்ளத்தையும் ஒருங்கே கவருகின்றன. ஆனல் அவைகளுக்கு இயங்கும் தன்மையில்லை. இதுபோல உலகத்தில் காணப்படும் பொருள்கள் யாவும் அன்னை பராசக்தியின் அருள்கொண்டு இயங்குகின்றன. இன்றேல் ஒன்றும் இயங்க மாட்டா. இதுபோலவே பிறவி எடுத்த பயனை அடைய வேண்டுமானல் அம்பிகையின் திருவருள் பெறவேண்டும். அவள் அருளால்தான் இறைவன் பதத்தைப் பெறலாம். பிறவிப்பயனுள்ளதாகும் என்ற கருத்தை இந்த வழிபாடு உணர்த்துகின்றது. இதனுல் இல்லத்தில் என்றும் குறையாத மகிழ்வு நிலவும். மனைவி மக்கள் யாவரும் நல்லதெய்வப்பண்புடையவர்களாய் விளங்குவார்கள்.

### 5. சுமங்கலி வழிபாடு

மூன்று, ஐந்து என்ற முறையாகவோ அல்லது முதல் நாள் ஒன்று, இரண்டாம் நாள் இரண்டு என்ற முறையாகவோ சுமங்கலிப்பெண்களை அழைத்துவந்து அவர்களுக்கு ஆசனம் அளித்து சந்தனம், குங்குமம் கொடுத்து உபசரித்து, வழிபடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமஞ்சல், குங்குமம், கண்ணாடி, புஷ்பம், வாழைப் பழம், தேங்காய், சந்தனம், தட்சிணை, வெற்றிலை - பாக்கு இவைகளை ஒரு தட்டில்வைத்துப் பெண்களுக்குக் கொடுத்து உபசரித்து ஒன்பதுநாளும் வழிபடுவார்கள். இந்த வழிபாடு சரசக்தி வழிபாடாகும். சரலிங்கவழிபாடு, அசரலிங்கவழி பாடு என்று இருவகை வழிபாட்டைச் சாஸ்திரம் கூறு கின்றது. ஆலயத்திலுள்ள சிவலிங்கவழிபாடு அசரலிங்கவழி பாடாகும். சிவானுபூதிச் செல்வர்களாகிய சிவனடியார்களை வழிபடுதல் சரலிங்கவழிபாடாகும். அதுபோலவே ஆலயத் தில் உள்ள தேவியை வழிபடுதல் அசரசக்தி வழிபாடா கும். பதிசேவையே பரமபதியின் சேவை என்றும், பரம பதியினிடம் குறையாத பக்திகொண்ட கற்பரசிப்பெண்கள் சரசக்தி ஆவர். அவர்களை வழிபடுவதால் தேவியின் அருள் நமக்குக்கிடைக்கும் என்பதே இதன் விளக்கமாகும். அன் பாக அவர்களுக்களிக்கப்படும் பொருள்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருபயனை உணர்த்துகின்றன.

மஞ்சள்: என்றும் நல்ல அழகையும்,
குங்குமம்: எடுத்த காரியங்களில் நல்ல வெற்றியையும்,
கண்ணாடி: வீரத்தையும் - நோயற்ற வாழ்வையும்,
நறுமலர்: ரஜோகுண தமோகுணம் நீங்கிச் சத்துவகுண வாழ்வையும்,
பழம்: பிறவியின் நற்பயனையும் - நல்ல பண்புடைய மைந் தர்களையும் - விரும்பியவற்றைப் பெறுவதையும்,
தேங்காய்: உள்ளம் குறைவில்லாதது என்ற நிறைவையும்.
தட்சிணை: அருட்செல்வத்துடன் குறைவில்லாத பொருட் செல்வத்தையும்,
தாம்பூலம்: சகலபோக பாக்கியங்களையும் அளிக்கக்கூடியது,

இந்த வழிபாட்டை அவரவர் மனப்பான்மைக்கு ஏற்ற வாறு பக்தியுடன்நடாத்தி அன்னையின் அருளுக்குப் பாத் திரமாவோமாக.

சீடன்: தங்கள் அருமையான போதனையால் பெரிதும் தன் னியன் ஆனேன். அன்னைக்கு வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (உபாகர்மம்)

— சிவம் —

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் ஆன்மாக்களது நலன்கருதித் தோன்றியது வேதம். எம்பிரானது அளக்கலாகாத பெருமை, பேராற்றல், உயிர்கள் பொருட்டு அவரிடத்திருந்து பெருகும் தடைப்படாக் பெருங்கருணை, உண்மை, நுட்பம் ஆன்மாக்கள் இறைவனை வழிபட்டு உய்தி அடையும் உபாயங்கள் முதலாய பலவற்றைப் பலபட விரித்துக்கூறுவது வேதம்.

காத்தற் கடவுளாகிய நாராயணமூர்த்தியின் அம்சமாக, பராசரமுனிவர் புதல்வராக உலக நன்மையின் பொருட்டு அவதரித்த வியாச பகவான், பரந்துகிடந்த வேதத்தை உலக நன்மையை உத்தேசித்து இருக்கு. யஜுர், சாமம், அதர்வம் என நான்காக வகுத்தருளினார். வேதம் ஓதும் அதிகாரம்பெற்ற அந்தணர்கள் ஆண்டுக்கு ஒருமுறை வியாசபகவானுக்குப் பூசைவழிபாடு செய்து. விரதங்காத்து, வேதம் ஓதத்தொடங்குவதே உபாகருமம் எனப்படும்.

ஆண்டுக்கு ஒருமுறை அந்தணர்கள் யாவரும் வேதம் ஓதத்தொடங்குவதென்றல், ஆண்டுதோறும் வேதத்தை ஓதிமுடிக்கவேண்டிய தினமும் இருக்கவேண்டுமே. அத்தினந்தான் தைமாசப் பூரணையாகும்.

மகரசங்கிராந்தி எனப்படும் தைமாசம் முதல் ஆனி மாசம் முடியவுள்ள ஆறுமாச காலம் உத்தராயணம் எனவும், ஆடிமாசம் முதல் மார்கழி ஈறான ஆறுமாசகாலம் தட்சிணயனம் எனவும் சொல்லப்படும். உத்தரம்-வடக்கு தட்சிணம் - தெற்கு, அயனம் - பாதை. கிராந்தி மண்டலத்தில் பூமி தனது அச்சில் சுழன்றுகொண்டு சூரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைச் சுற்றிவருங் காலம் ஒருவருடம். வான சோதிகளை நெறிப்படுத்தும் ஆற்றல் உடையது துருவ வெள்ளியாகும்.

"அகிலம் யாவுக்கும் அந்துருவாணிபோல்" எனக் கூறப்பட்டிருக்கிறது. துருவ நட்சத்திரம் வடதிசைக்கண் உள்ளது பூமியின் நாராசம் 23 1/2 பாகை சாய்வில் துருவனை நோக்கியது, தெற்கேயுள்ள மகரவிருத்தத்திலிருந்து வடக்கேயுள்ள கர்க்கடக விருத்தம்வரை சூரியனது லம்பகிரணங்களை (நேர் ஒளியை)ப் பெறும்வண்ணம் பூமியானது தன் தினந்த (நாள்வீதச்) சுழற்சியுடன் வடக்குநோக்கிப் படிப்படியாகச் செல்லுங்காலம் உத்தராயணம் என்றும், அவ்வாறே மீட்டுத் தெற்குநோக்கிச் செல்லுங்காலம் தட்சிணாயனம் என்றும் பிரித்தறிய வேண்டும். உத்தராயனம் தேவர்களுக்கு ஒரு பகல், தட்சிணயனம் தேவர்களுக்கு ஓர் இரவு. எனவே, மனிதருக்கு ஒருவருடம் தேவர்களுக்கு ஒருநாள். மங்கல கருமம் முதலாய விசேட செயல்கள் செய்யவேண்டிய காலம் — பகல் - உத்தராயனம். வேதம் ஓதுங்காலம் — இரவு - தட்சிணயனம்.

சிராவண சுத்தமான பூரணையில் உபாகர்மா எனப்படும் வியாசவழிபாட்டைப் பிராமணர்கள் செய்து, வேதம் ஓதத்தொடங்கி. மாகசுத்தம்பெற்ற தை மாசப்பூரணையில் வேத உத்சர்ஜனம் (ஓதி முடித்தல்) செய்வதே முறை. அப்படியன்றி, உத்தராயனத்திலும் செய்யவேண்டிய கர்மாக்களின்பொருட்டு வேதம் ஓத வேண்டியிருத்தலினால், தை மாசப் பூரணையில் வேத உத்சர்ஜனம் செய்யாமல் ஆடி மாசப்பூரணையில் வேத ஆரம்பம் செய்வதற்குமுன் பிராயச்சித்தமாக இருக்குவேதிகள் ஓமத்துடன்கூடிய உத்சர்ஜனக்கிரியையையும், யஜுர்வேதிகள் 'காமோகார்ஷீத்' என்னும் மந்திர ஜபத்தையும் செய்வர். இது தவிர்க்கமுடியாத காரணத்தினால் செய்யும் பிராயச்சித்தமாகும். இத்தப் பிராயச்சித்த சங்கற்பத்தில், "தைஷ்யாம் ஸ்ராவண்யாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயூாய உத்ஸஜநாக சுகரண ப்ராயஸ்சித்தார்த்தம்" எனச்சொல்லப்படுகிறது. அதாவது - "தைமாசப் பூரணையில் அத்தியயனத்தை முடிக்காத குற்ற நிவாரணத்தின் பொருட்டு" என்பது. அதனலேயே முதன்முதல் உபநயனஞ் செய்யப்பெற்ற பிரமசாரிகள் உபாகருமத்துக்கு முன்பு வேதம் ஓதும் அதிகாரம் பெருராகலின் பிராயச்சித்தம் செய்ய வேண்டியதில்லை என விதிக்கப்பட்டிருக்கிறது.

இருக்குவேதிகளுக்குப் பூரணையோடு சம்பந்தப்பட்ட திருவோண வியாபகமே உபாகர்மத்துக்கு முக்கியமானது. யஜுர்வேதிகளுக்கு அவிட்டத்தோடு தொடர்புடைய பூரணை வியாபகமே உபாகர்மத்துக்கு உரியது. சாமவேதிகளுக்கு பாத்திரபத சுத்தம்பெற்றபின், வரும் அத்தநட்சத்திர வியாபகமே உபாகர்மத்துக்கு உரியது.

இச்சந்தர்ப்பத்தில் பிராமணர்களுக்குரிய கோத்திரம், சூத்திரம், வேதம் என்பனபற்றிச் சிறிது விளக்கம் கூறவேண்டியது அவசியமாகும். முனிவர் (இருஷிகள்) பரம்பரையில் தோன்றியவர்கள் பிராமணர். அதனல், பிராமணர் யாவரும் தாம் இன்ன பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதைத் தமது மூதாதையர் மூலமாக அறிந்திருத்தல் வேண்டும், அதுவே கோத்திரம் எனப்படும். உதாரணமாக, குண்டினமுனிவர் வழிவந்தவர் கௌண்டின்னிய கோத்திரம், பாரத்துவாஜ முனிவர் வழிவந்தவர் பாரத்துவாஜகோத்திரம், அத்திரிமுனிவர் வழிவந்தவர் ஆத்திரேய கோத்திரம், பிருகுமுனிவர் வழிவந்தவர் ஸ்ரீவத்ஸ கோத்திரம், காசிப முனிவர் வழிவந்தவர் காசிப கோத்திரம், சாண்டில்லியமுனிவர் வழிவந்தவர் சாண்டில்லிய கோத்திரம் முதலாயின. தமது கோத்திர முதல்வர் எந்த வேதத்தை முதன்மையாகக் கொண்டு ஓதிவந்தாரோ, அவர் பரம்பரையினர் அந்த வேதிகள் எனப்பட்டு இருக்கு வேதிகள், யஜுர் வேதிகள், சாம வேதிகள் எனத் தம்மை வேறு பிரித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிக்கொள்வர். ஒரு வேதியான அந்தணன் தனது வேதத்தை முதலில் ஓதிய பின்புதான் ஏனைய வேதங்களை ஓதலாம்.

வைதிக கர்மாக்களைச் செய்கின்ற ஒழுங்குபற்றி ஆபஸ்தம்ப முனிவர், ஆசுவலாயன முனிவர், போதாயன முனிவர் என்போர் தனித்தனியாகச் சூக்திரங்களைச் செய்திருக்கின்றனர். அவரவர் செய்த சூத்திரம் அவ்வம் முனிவர் பெயர்களாற் குறிக்கப்படும். எனவே பிராமணர் ஒவ்வொருவரும் தம்குல மூதாதையர் எந்தச் சூத்திரத்தைப் பின்பற்றிக் கர்மாக்களை அநுட்டித்து வந்தனரோ அதனையே தாமும் அறிந்து கைக்கொள்ளுதல் மரபாகும். பல செயல் முறைகளில், சூத்திரங்கள் தம்முள் ஒன்றுபட்டாலும், சிலவற்றில் தம்முள் வேறுபடலாம்.

தம் கோத்திரத்தவருள் பிரபல்லியம்வாய்ந்த ஐந்து முனிவர் பெயர்களை முதன்மைப்படுத்திப் போற்றி வருபவர் பஞ்சார்ஷேயர் என்றும்; மூன்று முனிவர் பெயர்களைப் போற்றிவருபவர் திரயார்ஷேயர் என்றும் கூறப்படுவர் ※ ஒவ்வொருவரும் தங்கள் இருஷி பரம்பரையைத் தங்கள் மூதாதையரிடமிருந்து கேட்டு அறிந்துகொள்ளுவதே முறை.

ஆகவே, ஒவ்வொரு பிராமணரும் பெரியோரை வணங்கியவுடன் அபிவாதனம் சொல்லும்போது, இவற்றையெல்லாம் தமது குல முன்னோர் அநுட்டித்த முறையை அறிந்து முதலில் இருஷிபரம்பரை, பின்பு கோத்திரம், அதனையடுத்

---

※ உதாரணமாக - பார்க்கவ, ச்யவந, ஆப்நவான, ஔர்வ, ஜாமதக்ந்ய - பார்க்கவ, சியவன, ஆப்நுவ, ஔர்வ, ஜாமதக்கிய என்பது பஞ்சார்ஷேயம்; ஆங்கீரஸ, பார்ஹஸ்பத்ய, பாரத்வாஜ - ஆங்கீரஸ, பார்ஹஸ்பத்திய, பாரத்துவாஜ என்பது திரயார் ஷேயமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துச் சூத்திரம், அதன்பின் தனது வேதம், இறுதியில் தனது பெயர் என்பவற்றை வரிசையாகச் சொல்லவேண்டும்.

பிராமணர்களில் ஒவ்வொரு வேதிகளும் இயன்றவரை ஒரு புண்ணிய தலத்தில் ஒருங்கு கூடி உபாகர்மாவைச் செய்வது முறையாகும். உபாகர்மம் என்பது பிராமண சமூகத்தவர் யாவரும் ஆண்டுக்கு ஒருமுறை பயபக்தியோடு தவறாது அநுட்டிக்கவேண்டிய சிறந்த விரத நாளாகும். அதற்காகவே பாரதநாட்டில் உபாகரும தினம் பகிரங்க விடுமுறையாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

---

## உபாகர்ம நிகழ்ச்சி.

அகில பிராமண குருசமூக சேவாசங்கத்திறல் நடாத்தப்படும் இவ் வருட உபாகரும நிகழ்ச்சி பின்வரும் ஒழுங்குப்படி செய்யப்பட்டுள்ளன.

**ஆடி மீ 27 உ புதன்கிழமை (11-8-65) இருக்கு வேதஉபாகர்மம்,**

| இடம் | தொடங்கும் நேரம் | ஆசாரியர் பெயர் |
|---|---|---|
| 1. "காயத்திரி பீடம்" யாழ்ப்பாணம், | முற்பகல் 10-00 மணி | 'வியாகரண சிரோமணி' பிரமஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் |
| 2. கோட்டுவாசல் அம்பாள் கோவில், பருத்தித்துறை. | காலை 8 - 00 மணி | ,, அ. நாராயணசாஸ்திரிகள் |

**ஆடி மீ 27-ந் திகதி வியாழக்கிழமை 12-8-65 யஜுர்வேத உபாகர்மம்**

| இடம் | தொடங்கும் நேரம் | ஆசாரியர் பெயர் |
|---|---|---|
| 1. பெருமாள் கோவில், யாழ்ப்பாணம். | 11-00 மணி | பிரமஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் |
| 2. கந்தசுவாமி கோவில், நீர்வேலி. | 8 - 00 மணி | ஷை சாஸ்திரிகள் |
| 3. கந்தசுவாமி கோவில், கோப்பாய். | 10 00 ,, | ,, சே. சுப்பிரமணியக் குருக்கள் |
| 4. வீரபத்திரர் கோவில், அல்வாய் | 10-00 ,, | ,, இ. சிவசாமிக் குருக்கள் |
| 5. வத்தாக்கை சிவன் கோவில், சுந்தரோடை. | 10-00 ,, | ,, சு. சிவசுப்பிரமணிய ஐயர் |
| 6. மணற்காடு அம்மன் கோவில், காரைநகர் | 9-00 ,, | ,, இ. சோமசுந்தரக் குருக்கள் |
| 7. கண்ணகை அம்மன் கோவில், புங்குடுதீவு. | 9-00 ,, | ,, இராமச்சந்திரஐயர் |

ஏனைய இடங்களில் நடைபெறும் உபாகர்ம ஒழுங்குகள்பற்றி எமக்கு அறிவிக்கப்படாததால் இங்கு குறிப்பிட முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அநுபந்தம் 1.

ஸ்நபநாவலி: |

# ஸ்நபநாவலி

(தமிழுரையுடன்)

## இ. கு. பூர்ணனந்தேசுவரக் குருக்கள்

அவ்விரு வகையுள் முன்னையது விஞ்ஞானகலருக்கும் பின்னையது பிரளயாகலருக்கும் எனக்கொள்க. சகலருக்கு நில உலகத்தில் ஆசான் மூர்த்தியை அதிட்டித்து நின்று செய்வது என்பதாலும், மயூரகிரி புராணத்தில் -

"ஒருமலர்க் கறிவினுள்ளே யுணர்வதா யுணர்வையீந்தும்
இருமலர்க் கேற்றினேறி யெதிர்ந்திரு ணீக்கஞ்செய்தும்
பொருவில்மும் மலருக்கன்னோர் போலவந் தறிவைத்தந்தும்
அருள் அமலன்" — என்று கூறியதாலும் அறியலாம்.

மேலும், சிவபிரான் ஆன்மாக்களுக்குப் பாசங்களை நீக்கி அருள்செய்வதை -

"பாச வீக்கித்தன் பாற்படு நல்லருள்
ஈசனல்குமியல்பென" என்று கந்தபுராணத்திற்கூறியதும் நோக்கற்பாலது.

லயபோகாதிகார ஸம்பு: - லயம்போகம் அதிகாரம் என மூன்று விதமாக இருந்து அருள்புரிபவர் இசுவரன். இதனைச் சிவனும் லயம்போகம் அதிகாரம் என மூன்று விதமாக இருந்து முறையே சிவன், சதாசிவன், மகேசுவரன் (ஸைஹ்வா) என்று மூன்று பெயர் பெறுகிறார். சிவனுடைய செய்கையும் அதிகாரம் போகம் லயமென மூன்று விதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனாலதிகரிக்கப்படுவது அதிகாரம் (சிருஷ்டி)
ஸ்திதிரூபமான செய்கை காத்தல் (போகம்)

சங்காரத்துக்குப்பின் உண்டாகும் ஜகத்தின் உபாதானாதிகளைக் காக்குந் தொழில். ஆன்மாக்களுக்குத் தக்கபடி போகத்தின் புசிப்பைக் கொடுத்தல் என்றவாறு.

லயிப்பது லயம் - சிருஷ்டித்தவைகளைச் சங்கரிக்குந் தொழில். அது சம்ஹாரரூபமான அநுக்கிரகமாகும். (என்று சித்தாந்த சாராவளி வியாக்கியானத்திலும்;

'ஒளிர்சிவன் லயமே போகமான பேரதிகாரத்தோடு அதிகரணத்தினுமே''
— சிவஞான சித்தியார்

லயத்தில் சிவதத்துவமும் சக்திதத்துவமும், போகத்தில் சதாசிவதத்துவமும், அதிகாரத்தில் சுத்தவித்யாதத்துவமும், ஈசுவரதத்துவமும் அடங்கும். ஆக ஐந்து தத்துவமும் மூன்றுளடங்கும். சிவமும் சக்தியும் நிஷ்களமாய் உள்ள மேனி லயம். சதாசிவம் சகளநிஷ்களமான மேனி போகம். ஈசனும் உருத்திரனுமான இரண்டும் மிக்க அதிகாரத்துடனே கூடியிருக்கிற (கரசரணங்களோடேயமைந்த) சகளத்திருமேனி அதிகாரம் என்க.

என்பவற்றால் விளங்கலாம். — சிவஞானசித்தியார் உரை.

ஶைவபூஷண நாயக:, ஜ்ஞானஶிவாசார்ய:, பஞ்சாக்ஷரஶிவாசார்ய:

என்பவற்றின் விளக்கத்தை:

"ஸ்ரீகாஞ்சீபுரவாஸி ஜ்ஞானாசார்யாங்க்ரி ஸேவிநா
க்ரியதே ஶைவபூஷாக்யம் ஸ்ரீபஞ்சாக்ஷரயோகிநா"

(காஞ்சிபுரத்தில் வசிக்கும் ஞானசிவாசார்யரின் திருவடிகளை வணங்கும் பஞ்சாக்ஷர யோகியால் இந்நூல் செய்யப்படுகிறது.) என்று சைவபூஷணம் என்ற நூலிற் சொல்லப்பெற்றதாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கோளகீஸந்தானகூடஸ்தாயிவதஃ உத்பாதிக வம்ஶ்யேந ஸ்வயம் ஸ்தாபிதா கோளகீமடாயிவதிஃ (கோளகிமடத்து அதிபதியாயிருந்து நடப்பிப்பவர்) என்றது முதலியவற்றால் இவர் கோளகிமடாதிபதி ஆவர் என்று ஸோமஶம்பு பத்ததி கூறுவதாலும் அறிக.

ஷட்தர்ஶந ப்ரவீணஃ - “வேதப்ராமாண்யகா நீஹ ப்ராதான்யேந ச தர்ஶநாநி ஷட் ந்யாயவைஶேஷிகாதீநி நிகத்யதாஃ”
(ஸர்வதர்ஶந ஸங்க்ரஹம்)

ந்யாய, வைஶேஷிக, ஸாங்க்ய, யோக, பூர்வமீமாம்ஸா, உத்தர மீமாம்ஸா இதி ஷட்தர்ஶந ஶாஸ்த்ர இதி ஸ்ம்ருதாஃ என்ற வியாக்கியானத்தாலறிக.

[இவ் விளக்கம் பேராதனை கலாநிதி ஸ்ரீமத் கா. கைலாசநாதக் குரு (பேராசிரியர்) எழுதியது']

இதைத் தவிர, கலாத்வா, தத்துவாத்வா, புவனாத்வா, பதாத்வா, வர்ணாத்வா, மந்திராத்வா என்ற அத்துவா முறைகளைப் பார்த்துணர்ந்தவர் என்றும் சிலர் கொள்வர்.

இதுவுமன்றி ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல் ஏற்றல் என்ற ஆறு கர்மாக்களிலும் வல்லுநர். இதனைத் திருமுருகாற்றுப் படையில்:

> “இருமூன்றெய்திய இயல்பினின் வழாது......அறம்நவில் கொள்கையந்தணாளர்” என்றும் நக்கீரனார் கூறினார்.

‘ஷட்கர்மநிரதஃ’ என்பதும் இதனையே என்றும் சிலர் கொள்வர்.

லோக அநுக்ராஹகஃ என்பது “ஞான நூல்தனை ஓதல் ஓதுவித்தல்....... இறைவனடியடைவிக்கும் என்றபடி ஞானத்தை விருத்திசெய்து பேரின்ப நிலை பெற அருள் புரிபவர் என்ற கருத்தை விளக்குவதாம்.

த்விதீயஃஶங்கரஃ இவ - சிவபெருமான் ஞானாசாரியத் திருமேனிகொண்டு பரிபக்குவநிலை பெற்றோருக்குத் தீக்ஷை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேச முதலியவற்றால் நன்னிலை பெறச் செய்வதுபோல இவரும் தக்க சீடர்கட்குத் தீக்ஷை உபதேசாதிகளைச் செய்து நன்னிலைப்படுத்துபவர் அல்லது, சங்கராசார்யர் போலப் பலநூல்கள், பாஷ்யங்களைச் செய்து, அஞ்ஞானத்தைப் போக்கி அறிவை விருத்தி செய்பவர்என்றும் கொள்ளலாம்.

𑌪𑍍𑌰𑌦𑍀𑌪 - ஞான விளக்கு - (அஞ்ஞானத்தை இருளுக்கு உவமிப்பதை 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌨𑍍𑌧𑌸𑍍𑌯 - (அஞ்ஞானமாகிய இருளால் குருடானவனுக்கு - என்பதாலறியலாம்.

"இருட்பிளம்பற எறிந்தெழுந்த சுடர்மணி விளக்கு" —திருவிசைப்பா

என்பதுபோல இருளை நீக்கும் ஒளிவளர் விளக்கு எனக் கொள்க.

𑌦𑍀𑌪𑌂 - கடினமான சொல், வசனம் முதலியவற்றுக்குரிய பொருளை அறியாது தடுமாறச்செய்யும் ஐயம்திரிபு அறியாமை என்னும் இருளைப்போக்கி நன்கு விளங்கக் கூறும் பொருளாகிய ஒளியைப் பரப்பும் தீபம்போன்ற வியாக்யானம் என்பது கருத்து.

---

உ 𑌮𑌙𑍍𑌗𑌳𑌾𑌚𑌰𑌣𑌮𑍍

(கடவுள் வாழ்த்து)

𑌨𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌵𑌂 𑌯𑌾𑌗𑌶𑌾𑌲𑌾 [illegible] 𑌨𑌾𑌵𑌧𑍀𑌨𑌾𑌦𑌿𑌕𑌃।
𑌸𑍍𑌨𑌪𑌨𑌾𑌵𑌲𑌿 [illegible] 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃॥

இ—ள் 𑌶𑌿𑌵𑌂 - சிவபெருமானை

𑌨𑌤𑍍𑌵𑌾 - வணங்கி

𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑍍𑌤 - (நவகலசஸ்நபநம் முதல்) ஸஹஸ்ரகலச ஸ்நபநம் வரை

𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 - எல்லா ஸ்நபநங்கட்கும்

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம் 2.



# ஆத்மார்த்த சிவபூஜை

— சிவஸ்ரீ. ச. கணபதீசுவரக் குருக்கள் —

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ததோঽஸ்த்ராய நம இதி பூஜ்ய ஹ்ருத்ஸ்வாஹா ப்ரதக்ஷிணவா
ஹநம் ||
ஸோமாய ஸ்வாஹா ந ஸஜ்யாநமிதியச் நேத்ராந்தம் த்ரா
வநம் |
ஸம்ஹாரயாஷ்டஸப்தமிவாந்தே ஹ்ருதயம் ஷடாஸ்யயோ
வாஹய: ||
ஸதஸ்ராதேஹ: ஸ்வநந்த வஹநவ நஸ்வாநந்த யா
ஸாஹஸா |
வாஸு பூர்ணாத்ர விசேஷநம் ஸப்தவிதோஹத்ரவ
நாமோவணம் ||
விஷ்வக்ஸேநாய வஜ்ரஹஸ்தாய வஜ்ரதேஹாய ஸக்த்யாதிஸக்தம்
ததா: |
வஜ்ராய நம இதி வஜ்ர ஹிமாந்ராஸ்வம்
ஸாக்ருதி: ||
பூர்ணாந்ராய வியாநஷ்ட ஸஹிதத்ரி ஸம்கராஸ்ய
வநம் |
ஸ்ரீகண்டாய பூர்ண ஸதுகாய பூர்ண ஸயோவிஷ்ராஸீ
ராவநம் ||

**மந்திரசுத்தி வருமாறு:-** மூலமந்திரத்தைத் துவாதசாந்த மளவாகவும், பஞ்சப்பிரம்ம மந்திரங்களைப் பிரமரந்திரமளவாகவும் ஷடங்கமந்திரங்களை விந்துஸ்தானமளவாகவும் மூன்று மாத்திரை, இரண்டு மாத்திரை, ஒரு மாத்திரைப் பிரகாரம் முறையே அளபெடை, நெடில், குறிலாக உச்சரித்தல் மந்திரசுத்தியாகும்.

**இலிங்கசுத்தி :-** பின்னர், இருதயத்தில் வைத்து அஞ்சலிசெய்யும் கையை விடுத்து சலப்பிரசாதமாகிய (சலப்பிரசாதம் - அசையும் மேடை) பெட்டகத்தின் முன் பக்கத்தில் பீமருத்திரனைப் பூஜித்து அநுஞ்ஞை செய்க. பெட்டகக் கோயிலைத் திறந்து பரிவார தேவதைகளை அந்த அந்த ஸ்தானங்களிலே எழுந்தருளச்செய்து பூஜிக்க. ஸ்நாந வேதிகையில் பரிவட்டம் அமைத்து, அதன் மேல் ஆறு ஆதார பூஜை செய்க. பெட்டகக் கோவிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின்றும் சிவலிங்கப்பெருமானை இரண்டு கைகளாலும் எழுந்தருளச்செய்து, தரித்திருந்த பரிவட்டத்துடனே ஸ்நான வேதிகையில் அமர்ந்தருளச்செய்க. பரிவட்டத்தை முற்றும் நீக்கிச் சிவகாயத்திரி மந்திரத்தால் பழைய பூஜையாக ஒரு புஷ்பஞ் சாத்தி, ஐந்து திருமுடிகளிலும் போகியானவன் மூல மந்திரத்தால் சாமான்யார்க்கியத்தை ஈசானம் முதலாகக்கொடுக்க. இந்த அவசரத்தில் தயிரன்னமாதல், தின்னக்கூடியபொருளாதல், கறந்த உஷ்ணத்தோடு கூடிய பச்சைப் பாலாதல், தாம்பூலமாதல் நைவேத்தியம் செய்க. அஸ்திரமந்திரத்தால் மணியடித்து, சிகாமந்திரத்தினால் தூபமும், நேத்திர மந்திரத்தால் தீபமும் சமர்ப்பிக்க. ஐந்து திருமுடிகளிலும் கட்டை விரல் முதலாக, சத்தியோஜாதம் முதலான மந்திரங்களை நியசித்து, கட்டை விரல் அணி விரல்களின் நுனியினால் ஒரு புஷ்பம் எடுத்து அங்குஷ்ட அநாமிகா மந்திரங்களினாலும், இருதய மந்திரத்தாலும் நிருமாலியத்தைக் கழிக்க. மேற்கூறிய புஷ்பத்தை இருதய மந்திரத்தினால் திருமுடியின்மீது சாத்திச் சண்டேசுவரர் நிமித்தமாக ஒரு பாத்திரத்தில் ஈசான திக்கில், இருதய மந்திரத்தால் நிருமாலிய புஷ்பங்களை வைத்துக் கையைச் சுத்தம் செய்க. அஸ்திர மந்திரத்தால் சிவலிங்கத்தையும், பாசுபதாஸ்திர மந்திரத்தால் ஆவுடையாரையும் அபிஷேகஞ் செய்க. பின்னர் சாமான்யார்க்கியத்தால் அபிஷேகஞ் செய்தபின் கெண்டியிலுள்ள ஜலத்தால் இருதய மந்திரத்தோடு அபிஷேகஞ் செய்க. இது லிங்க சுத்தியாம்.

அதன் பின்னர்க் கவசமந்திரத்தால் குச்சுப் புல்லுச் சாத்தி, மீளவும் ஸ்நான வேதிகையிலெழுந்தருளச் செய்து, இருதய மந்திரத்தால் சுத்தஜல அபிஷேகஞ் செய்க. மீளவும் ஆறு ஆதாரம் பூஜித்து, சிவாசனமும் சிவமூர்த்தியும் கற்பிக்க. மூலமந்திரத்தால் ஆவாஹனம் செய்து, ஸ்தாபனம், ஸந்நிதானம், ஸந்நிரோதனம் என்பன செய்க. நேத்திரம் நீங்கிய இருதய முதலிய ஐந்து மந்திரங்களாலும் அர்ச்சித்து, தேனுமுத்திரை காட்டுக. அஷ்ட புஷ்பார்ச்சனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் தூபதீபம் சமர்ப்பித்துப் பின்னர் இருதய மந்திரத்தால் அபிஷேகஞ் செய்து, கவச மந்திரத்தால் வஸ்திரங்கொண்டு ஈரத்தை மாற்றி ஒரு புஷ்பஞ் சாத்தி வாசனை தைலமாகிய எண்ணெய்க்காப்பு சத்தியோஜாத மந்திரத்தாற் சமர்ப்பிக்க. அந்தமந்திரத்தால் மாக்காப்புச்செய்து, இருதய மந்திரத்தால் சுத்தஜல அபிஷேகஞ் செய்க. சத்தியோஜாத மந்திரத்தால் நெல்லிக் காப்பும், வாமதேவமந்திரத்தால் மஞ்சட் காப்பும் அபிஷேகஞ் செய்க. பின்னர் இருதய மந்திரத்தால் சுத்தஜல அபிஷேகஞ் செய்து, மூலமந்திரத்தால் பஞ்சகவ்யாபிஷேகமும் பஞ்சப் பிரம மந்திரங்களால் தனித்தனியே பஞ்சாமிர்தம், பால், தயிர் அபிஷேகமும், இருதய மந்திரத்தால் தேங்காய்த் துருவல், வாழைப் பழம், மாம்பழம், என்பவற்றை அபிஷேகம் செய்க. பின்னர் இருதய மந்திரத்தால் ஜல அபிஷேகம் செய்க. அதன்பின்னர் நாரத்தம்பழச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு, தமரத்தம்பழச் சாறு, கொளுஞ்சிப் பழச்சாறு இளநீர் என்னும் இவைகளை அபிஷேகஞ் செய்து, சுத்தஜல அபிஷேகஞ் செய்க. அதன் பின்னர் ஆத்மார்த்த மூர்த்திக்கு அன்னாபிஷேகம் செய்யலாமென்று மகுடாகமவசனமிருத்தலால் அன்னபிஷேகஞ் செய்து, தூபதீப நைவேத்தியம் சமர்ப்பித்து, சுத்தஜல அபிஷேகஞ் செய்க. பின்னர் சந்தனக் குழம்பு, குங்குமக் குழம்பு சாத்தி தூப தீப நைவேத்தியம் சமர்ப்பித்து மூலமந்திரம், பஞ்சப் பிரம மந்திரம், ஷடங்க மந்திரம், பதமந்திரங்களால் சததாரையால் சுத்தஜல அபிஷேகஞ்செய்க. பின்னர் விசேஷார்க்கிய ஜலத்தால் அபிஷேகஞ் செய்து, சுத்தமான வெள்ளை வஸ்திரங்கொண்டு கவச மந்திரத்தால் திருவொற்றுடை சாத்தித்திருமுடியில் ஒருபுஷ்பஞ்சாத்திப் பத்திரபீடத்தின் மேல் வடக்கே கோமுகியாக எழுந்தருளச்செய்க. பின்னர் வாயுகோணத்தில் தெற்கு முகமாக விநாயகரையும், அவருக்குக் கிழக்காக மஹாலட்சுமியையும், ஈசான கோண முதல் மேற்கு முகமாகச் சப்தகுரவர்களையும் பூஜிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும்...

# அநுபந்தம் 3.

ஆமரூப ஆமஶ்ராத்³த⁴ம் ||

—|—

விக்⁴நேஶ்வர பூஜா |

ஸகலீக்ருத்ய ஸாமாந்யார்க்⁴யம் ஸாத⁴யேத் | [illegible] – ஓம் ஹாம் ஹ்ருத³யாய வௌஷட் இதி [illegible] – க³ந்தா⁴க்ஷத [illegible] – [illegible] பூஜயேத் |

[illegible] ஸம்ப்ரோக்ஷ்ய – பூஜயேத் |

---

## ஆமருப ஆகம சிராத்தம்

[ தமிழ் விளக்கம் செய்பவர்:- பத்திராசிரியர் ]

### விக்கினேசுவர பூஜை

சகளீகரணஞ் செய்து முறைப்படி சாமானிய அருக்கியங் கூட்டியபின், அந்த அருக்கிய நீரினால் தனக்கும், பூசைசெய்யும் இடத்துக்கும் உபகரணங்களுக்கும் புரோட்சிக்க.

பார்வதிதேவியின் முகமாகிய தாமரைகளை அலரச் செய்யும் சூரியனாக உள்ளவரும், யானையின் திருமுகத்தை உடையவரும் மெய்யன்பர்கள் விரும்புவன எல்லாவற்றையும் அளிப்பவரும், ஒற்றைமருப்பை உடையவரும் ஆகிய விநாயகப்பெருமானை இரவும் பகலும் ( இடைவிடாது )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகஜாநந பத்மார்க்கம் கஜாநநம் அஹர்நிஶம்|
அநேகதம் தம் பக்தாநாம் ஏகதந்தம் உபாஸ்மஹே||

ஓம் அநந்தாய நம:| ஓம் தர்மாய நம:| ஓம் ஜ்ஞாநாய நம:| ஓம் வைராக்யாய நம:| ஓம் ஐஶ்வர்யாய நம:| ஓம் பத்மாய நம:| ஓம் ஹ்ராம் கணபத்யாஸநாய நம:| ஓம் ஹ்ரௌம் கணபதிமூர்த்தயே நம:|| த்யாநம்||

லம்போதரம் ஶ்யாமதநும் கணேஶம்
குடாரமக்ஷஸ்ரஜமூர்த்வகாத்ரம்|
ஸலட்டுகம் தந்தமத:கராப்யாம்
வாமேதராப்யாஞ்ச ததாநமீடே||

ஓம் கம் கணபதயே நம:| இத்யாவாஹ்ய - ஆவாஹநாதி முத்ரா: ப்ரதர்ஶ்ய - விக்நேஶ்வராய நம: - பாத்யம் ஸம

---

வணங்குகிறேன். எனவணங்கிய மனத்துடன் அனந்தன் முதலாகிய ஆறு ஆதார ஆசனங்கற்பிக்க, அதன்மேல் கண பதிக்குரிய ஆசனமும் அவ்வாசனத்தில் கணபதிமூர்த்தியும் எழுந்தருளியுள்ளாராகக் கற்பித்து வணங்குக - தியானம்- தளர்ந்த வயிற்றோடு கூடியவரும், காய்ச்சிய பொன் வண்ணத்தரும், கோட்டி அட்சமாலை என்பவற்றை முறையே இடம் - வல மேற்கரங்களிலும், மோதகம், தந்தம் என்பவற்றை முறையே இடம்-வலக் கீழ்க்கரங்களிலும் தரித்துள்ளவருமாகிய கணேசப்பெருமானைத் தியானிக்கிறேன் - என்று சொல்லி விம்பத்தில் புட்பஞ்சாத்துக. பின்பு, ஆவாகனம் முதலாய முத்திரைகளைச் சமர்ப்பிக்க பாத்யம்—திருவடி அபி டேக தீர்த்தம், அர்க்கியம்—பூஜிக்கப்பெறும் உரிமையளிக் கும் நீர், ஆசமனம்—பருகுவதற்கு அளிக்கும் நீர். இவைமுத லான உபசாரங்களோடு பூசித்தபின்பு, 'சிவபிரான் திருக்குமாரரே! யானைமுகப்பெருமானே! விக்கினங்களை யெல்லாம் அடக்கி ஆளும் அரசே! தேவரீருக்கு வணக்கம் இடையூறுகள் யாவும் நீங்கும்வண்ணம் தேங்காய் உடைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 - 𑌅𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 - 𑌆𑌚𑌮𑌨𑍀𑌯𑌂 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 - 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 - 𑌸𑍍𑌨𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌆𑌚𑌮𑌨𑍀𑌯𑌂 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 - 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤 𑌗𑌨𑍍𑌧𑌾𑌕𑍍𑌷𑌤𑌪𑍁𑌷𑍍𑌪 𑌉𑌪𑌚𑌾𑌰𑌾𑌨𑍍 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿॥

𑌵𑌿𑌘𑍍𑌨𑌰𑌾𑌜 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑍁 𑌶𑌿𑌵𑌪𑍁𑌤𑍍𑌰 𑌗𑌜𑌾𑌨𑌨।
𑌨𑌾𑌰𑌿𑌕𑍇𑌲𑌂 𑌪𑍍𑌰𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌘𑍍𑌨𑌾𑌨𑍍 𑌵𑍍𑌯𑌪𑍋𑌹𑌯॥
𑌇𑌤𑌿 𑌨𑌾𑌰𑌿𑌕𑍇𑌲𑌂 𑌭𑌙𑍍𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 - 𑌨𑌿𑌵𑍇𑌦𑌯𑍇𑌤𑍍॥

𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑌂 𑌗𑍁𑌗𑍍𑌗𑍁𑌲𑌂 𑌧𑍂𑌪𑌂 𑌸𑍁𑌗𑌨𑍍𑌧𑌞𑍍𑌚 𑌮𑌨𑍋𑌹𑌰𑌮𑍍।
𑌕𑌪𑌿𑌲𑌾𑌘𑍃𑌤 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌧𑍂𑌪𑍋𑌽𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑌾𑌮𑍍॥
𑌧𑍂𑌪𑌮𑌾𑌘𑍍𑌰𑌾𑌪𑌯𑌾𑌮𑌿।

𑌸𑌾𑌜𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌹𑍍𑌨𑌿𑌨𑌾 𑌯𑍋𑌜𑌿𑌤𑌂 𑌮𑌯𑌾।
𑌗𑍃𑌹𑌾𑌣 𑌮𑌙𑍍𑌗𑌲𑌂 𑌦𑍀𑌪𑌂 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌪𑌹॥
𑌦𑍀𑌪𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌮𑌿॥ 𑌨𑍈𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 - 𑌓𑌂 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑌅𑌵𑌕

---

குத் திரு முன்பு நிவேதிக்கிறேன்" என்று சொல்லி வணங்கித் தேங்காய் உடைத்து நிவேதிக்க.

"தசாங்கம், குங்குலியம், பசுநெய், என்பவற்றால் நறுமணம் கமழும் மனோகரமான புகையோடுகூடிய தூபத்தைச் சமர்ப்பிக்கிறேன். எம்பிரானே! ஏற்றருளுக" எனச் சொல்லித் தூபங் காட்டுக. தசாங்கம் என்பது:- தேன் கோரைக் கிழங்கு, நெய், சந்தனம், குக்குலியம், அகில் யானைத் திப்பலி, தேவதாரு, வெருகு, வெண் கடுகு என்னும் பத்துச் சரக்குச் சேர்த்து இடித்தது.

நெய் பெய்து முத்திரியிற் கொளுவிய தீச்சுடர் பொருந்தியதும் மூவுலக இருட் படலங்களை நீக்கவல்லதும் மங்களகரமானதும் ஆகிய தீபத்தைச் சமர்ப்பிக்கிறேன். எம்பிரானே! ஏற்றருளுக" எனச் சொல்லித் தீபங் காட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யநம:| ஸர்வோபசாராய நம:| கணபதயே ஸ்வாஹா. நாளிகேர ஃபலத்வயம் - குடம் - கதலீஃபலம் நிவேதயாமி| பாநீயம் ஸமர்ப்பயாமி| ஹஸ்தப்ரக்ஷாளநம் - பாதப்ரக்ஷாளநம் - ஸமர்ப்பயாமி| ஆசமநீயம் ஸமர்ப்பயாமி|

பூகீஃபலஸமாயுக்தம் நாகவல்லீ தளைர்யுதம்|
கர்ப்பூரசூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம்
தாம்பூலம் நிவேதயாமி|| [தாம்]

கஜாநநம் பூதகணாதிஸேவிதம் கபித்த ஜம்பூ
ஃபலஸார பக்ஷிதம்|
உமாஸுதம் சோகவிநாசகாரணம் நமாமி விக்நேச்வர
பாதபங்கஜம்|
கர்ப்பூர நீராஜநம் தர்சயாமி||

---

பின்பு, முறைப்படி தேங்காய், வெல்லம், வாழைப் பழம் என்பவற்றை நிவேதிப்பிக்க. திருக்கர விளக்கம், திருவடி விளக்கம் என்பவற்றிற் கான நீரைச் சமர்ப்பிக்க. ஆசமனீயம் ஒப்பிக்க. பாக்கு, வெற்றிலை, பச்சைக் கருப்பூரப் பொடி முதலான நறுமணத் தாம்பூலத்தைச் சமர்ப்பிக்க.

"யானை முகமுடையவரும் பூதகணங்களாற் சேவிக்கப் படுபவரும், விளாங்கனி, நாவற்கனி முதலியவற்றின் சாரத்தை விரும்பி ஏற்பவரும், உமையாள் திருக்குமாரரும் துக்க நிவாரணத்துக்கு மூலகாரணரும் ஆகிய விக்கினேசுவரப் பெருமானது திருவடித் தாமரைகளை வணங்குகிறேன்" என்று பிரார்த்தித்துக் கருப்பூர சோதியைச் சமர்ப்பிக்க. அருக்கியங் கொடுத்தபின் விநாயகப் பெருமானுக்குரிய பதினாறு திருப்பெயர் சொல்லி அறுகு. பூ, வில்வம் என்பவற்றால் அருச்சிக்க. மூலமந்திரஞ் சொல்லிச் சுவர்ணஞ்சாத்துக. இவ்வாறு விநாயகபூஜை செய்தபின் கருத்தா அட்டாங்க வணக்கஞ் செய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] - 𑍐 𑌸𑍁𑌮𑍁𑌖𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌏𑌕𑌦𑌨𑍍𑌤𑌾𑌯 𑌨𑌮𑌃॥ 𑍐 𑌕𑌪𑌿𑌲𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌗𑌜𑌕𑌰𑍍𑌣𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌲𑌮𑍍𑌬𑍋𑌦𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌵𑌿𑌕𑌟𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌵𑌿𑌘𑍍𑌨𑌰𑌾𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌵𑌿𑌨𑌾𑌯𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌧𑍂𑌮𑌕𑍇𑌤𑌵𑍇 𑌨𑌮𑌃। 𑍐 𑌗𑌣𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌫𑌾𑌲𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌗𑌜𑌾𑌨𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌵𑌕𑍍𑌰𑌤𑍁𑌣𑍍𑌡𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌶𑍂𑌰𑍍𑌪𑌕𑌰𑍍𑌣𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌹𑍇𑌰𑌮𑍍𑌬𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑍐 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌪𑍂𑌰𑍍𑌵𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃। 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧 𑌪𑌤𑍍𑌰𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌣𑌿 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿॥ [illegible] 𑌪𑌤𑍍𑌰𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿। 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿। 𑌇𑌤𑌿 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 -

𑌵𑌕𑍍𑌰𑌤𑍁𑌣𑍍𑌡 𑌮𑌹𑌾𑌕𑌾𑌯 𑌸𑍂𑌰𑍍𑌯𑌕𑍋𑌟𑌿𑌸𑌮𑌪𑍍𑌰𑌭।
𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌘𑍍𑌨𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌮𑍇 𑌦𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾॥
𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌯𑌾𑌂 𑌪𑍂𑌜𑌾𑌯𑌾𑌂 -

[illegible]

---

சிராத்தம் இனிது நிறைவேறும்வண்ணம் தோத்திரம் செய்க.

துதிக்கை பொருந்திப் பரிய திருமேனி கொண்டவரே! கோடி சூரியர் ஒருங்கு உதித்தாலன்ன ஒளியுடையவரே! எம்பெருமானே! எடுத்த எக்கருமமும் இடையூறின்றி இனிது நிறைவேறும்வண்ணம் திருவருள் பாலிக்க.

"ஆன்மாக்களுக்கெல்லாம் சுகம் அருளும் பரம்பொருளே! தேவரீருக்குச் செய்த பூஜை வழிபாடு பொருந்திய திருவோலக்கத்தைத் தரிசித்தமாத்திரத்தே கோடிக்கணக்கான பசு வதைப் பாவங்களும், கோடிக்கணக்கான பிரமகத்தி தோஷங்களும், சொல்லத்தகாத - செய்யத் தகாத ஈனச் செயல்களால் நேரும் கோடிக்கணக்கான பாபங்களும் உடனே அழிந்தொழியுமே" எனச் சொல்லி வழிபாடு செய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

𑌅𑌥 𑌪𑌂𑌚𑌗𑌵𑍍𑌯 𑌪𑍂𑌜𑌾 ||

𑌸𑍍𑌥𑌣𑍍𑌡𑌿𑌲𑍇 𑌨𑌵𑌪𑌦𑌂𑌵𑌿𑌲𑌿𑌖𑍍𑌯 - 𑌮𑌧𑍍𑌯𑍇:- 𑍐 𑌹𑌾𑌂 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌯 𑌨𑌮𑌃| 𑌇𑌤𑌿 𑌕𑍋𑌷𑍍𑌠𑌂 - 𑍐 𑌹𑌾𑌂 𑌸𑌾𑌹𑍍𑌲𑌾𑌦𑌿𑌷𑍍 𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃| 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 - 𑌤𑌤𑍍𑌰 𑌪𑌯𑌃 - 𑌈𑌶𑌾𑌨𑍇𑌨 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯 - 𑍐 𑌹𑍋𑌂 𑌈𑌶𑌾𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌇𑌤𑌿 𑌸𑌕𑍃𑌤𑍍 𑌅𑌭𑌿𑌮𑌂𑌤𑍍𑌰𑍍𑌯 -

𑌪𑍂𑌰𑍍𑌵𑍇:- 𑍐 𑌹𑌾𑌂 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌯 𑌨𑌮𑌃| 𑌇𑌤𑌿 𑌕𑍋𑌷𑍍𑌠𑌂 - 𑍐 𑌹𑌾𑌂 𑌸𑍌𑌭𑌾𑌗𑍍𑌯𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃| 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 - 𑌤𑌤𑍍𑌰 𑌦𑌧𑌿 - 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯 - 𑍐 𑌹𑍇𑌂 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌨𑌮𑌃| 𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌵𑌾𑌰𑌂 𑌅𑌭𑌿𑌮𑌂𑌤𑍍𑌰𑍍𑌯 -

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇:- 𑍐 𑌹𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌯 𑌨𑌮𑌃| 𑌇𑌤𑌿 𑌕𑍋𑌷𑍍𑌠𑌂 - 𑍐 𑌹𑌾𑌂 𑌤𑍇𑌜𑍋𑌵𑌤𑍀𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃| 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌘𑍃𑌤𑌂 - 𑌅𑌘𑍋𑌰𑍇𑌣 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯 - 𑍐 𑌹𑍂𑌂 𑌅𑌘𑍋𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃| 𑌇𑌤𑌿 𑌤𑍍𑌰𑌿𑌵𑌾𑌰𑌮𑌭𑌿𑌮𑌂𑌤𑍍𑌰𑍍𑌯 -

---

## பஞ்சகவ்விய பூசை

பஞ்ச - ஐந்து, கவ்யம் - கோ (பசு) சம்பந்தமுடையவை. அவை:- பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பன. முன்பு அமைத்த அரிசி மேடையில் தருப்பைகளால் ஒன்பது கோட்டஞ்செய்து, அவற்றின் நடுக்கோட்டத்தில் (சிவதத்துவகோட்டம்) கோட்டபூசையும் பாத்திர பூசையும் செய்து அதில் பால் நிரப்புக. இசான மந்திரத்தால் பூசித்து ஒருமுறை செபிக்க. கிழக்கே (சதாசிவதத்துவகோட்டம்) கோட்ட பூசையும் பாத்திர பூசையுஞ்செய்து அதில் தயிர் நிரப்புக. தத்புருடமந்திரத்தால் பூசித்து இருமுறை செபிக்க. தெற்கே (வித்தியாதத்துவ கோட்டம்) கோட்ட பூசையும் பாத்திர பூசையுஞ் செய்து அதில் நெய் நிரப்புக. அகோர மந்திரத்தால் பூசித்து மும்முறை செபிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீதப்பயிற்சி வகுப்பு

சைவ சமயிகளான சிறுவர் சிறுமியர் இளமையி
யே இசைப்பயிற்சி பெறச் செய்யும் நோக்கமாக,
லெ பிராமண குருசமூக சேவா சங்கத்தின் வித்வத்சபை
கீதப்பயிற்சி வகுப்பு ஒன்றைத் தொடக்கி நடாத்த
சயித்திருக்கின்றது.

வகுப்பை நடாத்தும் ஆசிரியராக, சங்கீதபூஷணம்
மஸ்ரீ ப. முத்துக்குமாரசாமி சர்மா அவர்கள் உடன்
டிருக்கிறார்கள். வாரத்தில் இரு தினங்களில் வகுப்பு
த்தப்படும்.

குப்புநடைபெறும் இடம்: ''காயத்திரி பீடம்'' 15, பிரப்
பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

ரம்பதினம்: அடுத்து வரும் விஜயதசமி தினமாகிய
புரட்டாதி மீ 19 உ (4-10-65) திங்கட்கிழமை.

சங்கீதப் பயிற்சி வகுப்பிற் சேர்ந்து பயில விரும்பும்
ானவர் 30-8-65 இல் அல்லது அதற்கு முன்கிடைக்கும்
டியாகத் தமது விண்ணப்பங்களை, அதற்குரிய படிவத்தில்
தெளிவாக எழுதி வித்தியாகாரியதரிசி அவர்களுக்கு
ஶ்ரீ. சங்கவிலாசத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களுடன் பிரவேசக் கட்டணம் ரூபா
ரண்டு செலுத்தப்படவேண்டும். வகுப்பிற்சேரும் பின்
ளகளது தொகைக்கு ஏற்றபடி அவர்களிடமிருந்து மாத
தம் ரூபா 5-00 க்கு மேற்படாமல் கட்டணம் பெறப்
டும். பிறவிபரங்கள் நேரில்.

விண்ணப்ப படிவங்களைப் பெறுவதற்கு மேலே குறிப்
பிட்ட விலாசத்துக்கு எழுதியோ அல்லது நேரடியா
வோ பெற்றுக் கொள்ளலாம் எழுத்துமூலம் தொடர்பு
கொள்பவர்கள் தமது பெயரும் விலாசமும் எழுதப்பெற்று
10 சதம் தபால் முத்திரையும் ஒட்டப்பட்ட கடித உறை
களும் சேர்த்து அனுப்பினலேயே அவர்களுக்கு விண்
ணப்பப்படிவங்கள் அனுப்பிவைக்கப்படும்.

ப. வித்தியானந்த சர்மா
ஷை சங்கப் பொதுக்காரியதரிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Estd: 1929

TELE [ PHONE: 296
GRAMS: "ROHINI"

உயர்ந்த
ரகத்
துணி
களுக்கு



பிரசித்திபெற்ற இடம்
திருமணைவபவங்களுக்கு ஏற்ற
பெனாறஸ், மணிப்பூரி
டிஸ்கூ சாரிகளும்
மற்றும்

எல்லாவித
ஜவுளிகளும்
சொந்தத
தறிகளில்
நெசவுசெய்த
கைத்தறி
சேலைகள்
மலிவான
விலைகளில்
வாங்கலாம்

# S. R. S.

## ஜவுளி மாளிகை

### எஸ். ஆர். செல்லத்துரை.

216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

J. P. 13-65

ஸ்வஸ்திப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
ந்யாய்யேந மார்கேண மஹீம் மஹீஶா:।
கோப்ராஹ்மணேப்ய: ஶுபமஸ்து நித்யம்
லோகா: ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து॥

இவ்வெளியீடு:- யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, பிரப்பங்குளம்வீதி இல: 15, "காயத்திரீபீடம்" காரியாலயத்தில் அகில பிராமண குரு சமூக சேவா சங்கத்தின் சார்பில், அதன் பிரசுரசபைக் காரியதரிசி: பிரமஸ்ரீ சு, சிவசுப்பிரமணிய ஐயர் அவர்களால், யாழ், வண்ணை ஸ்ரீ சாரதா அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்பெற்றது. 16-7-65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org